786

[தொ]குதி 5.] 1926௵ எப்ரல்மீ 1௳ [பகுதி 3.

14 MAY 1926

# மனமோகினி.

ஆக்கியோர்
ஆரணி. குப்புசாமி முதலியார்




பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலயம், சென்னை.

# மனமோகினி

ஓர் மாதாந்த சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நமது "ஆனந்தபோதினிச்" சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொரு நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெறும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட்டு வருகின்றார்கள். அச்சஞ்சிகை பற்பல விஷயங்களுக்கும் இடந்தரவேண்டியதா யிருத்தலின், அதில் ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதா யிருக்கிறது. அதனால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது. ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று இதனை 1922௵ பிப்ரவரி௴ 1௳ முதல் ஆரம்பித்தோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக்கொரு முறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி துப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவழத்தீவு" என்ற நாவல்கள் முடிவுபெற்று "ஞானசெல்வாம்பாள்" என்ற நாவல் தொடங்கப்பட்டிருக்கிறது. முடிவான இரண்டு நாவல்களும் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டுமென்றி சஞ்சிகைகள் கிடையா. "ஞானசெல்வாம்பாள்" வேண்டியவர்கள் சந்தாதாரராகச்சேர்ந்து சஞ்சிகைபெற்றுக்கொள்ளவேண்டும். இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங் கொண்டது. வருஷ சந்தா ரூ. 2-8-0 இரண்டரைதான். வெளிநாட்டிற்கு 3—0—0. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

☞ முன் பணம் அனுப்பினால் 2—8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணாவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இச்சஞ்சிகை அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆரணி துப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்ட நாவல்களடங்கியது. அவருடைய நாவலின் போக்கு எல்லோருக்குந் தெரிந்திருக்குமாகையால் இதன் மாதிரி காப்பி அனுப்பப்படமாட்டாது.

மானேஜர்: "ஆனந்த நிலையம்"

தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

யாய் வளர்க்க ஆண்டவன் அருள் செய்ததற்காக ஆனந்த பரவசமடைந்தார்கள்.

உண்ணாமுலை யியற்கையிலேயே மிக்க பெருந்தன்மை யான குணமுடையவள். முன்பு இராஜசுந்தரி தன்னைத் தூஷித்தபோதும் அவள் இராஜசுந்தரி மேல் பொறாமை யாவது துவேஷமாவது வெறுப்பாவது கொள்ளவில்லை. அவள் சென்ற பிறகும் அவளைப்பற்றித் தூஷண மொழிகள் பகரவில்லை. ஆகையால் இப்போது இராஜசுந்தரி தன் நடக்கைக்காக மிக்க மனஸ்தாபப்பட்டு இத்தகைய தியாகம் செய்ததை யறிந்தபோது உண்ணாமுலை அவள் விஷயத்தில் மிக்க பரிதாபமடைந்தாள். அவள் நேரில் வந்தபோது தன் சொந்தச் சகோதரி போலவே அவளைப் பாவித்து அன்போடு ஆலிங்கனம் செய்துகொண்டாள். தானும் ஒரு முறை கூடியவரையில் சொல்லிப்பார்த்தாள். இராஜசுந்தரி ஒரே பிடிவாதமாக விருப்பதை யறிந்து அவள் பெருந்தன் மையை வியந்து கண்ணீரால் தனது நன்றியை வெளியிட்டாள்.

கடைசியில் இராஜசுந்தரி, தான் ஜனகபுரிக்குச் செல்வதன்முன் ஒருமுறை மறுபடி வந்து உண்ணாமுலையைக் காண்பதாகக் கூறிவிட்டு அரிதிற் பிரிந்து சென்றாள். செல்லும்போது சிங்காரத்தை நோக்கி "நான் விடை பெற்றுக் கொள்கிறேன்; என் தந்தையின் காரியஸ்தர்களிடமிருந்து உனக்குக் கடிதம் வரும். அதன் மூலமாய் எல்லாம் முடிவாகும்" என்றாள்.

சிங்காரம்:—"நீ இந்நாட்டை விட்டுப் போகுமுன் இன்னொரு முறை உண்ணாமுலையை வந்து பார்ப்பதாகக் கூறினையே" என்றான்.

இராஜசுந்தரி:—"ஆம், கூறினேன். அவ்வாறே என்வாக்கின்

186503

படி நடக்கத் தவிரமாட்டேன். ஆனால் ஒருசமயம்..." என்றதே,

சிங்:—"ஒருசமயம் என்ன?" என்றான்.

இரா:-ஒருசமயம் என் கணவர் நான் போகுமுன் வந்துவிட்டால், நான் இங்குவர முடியாது. நாங்கள் சந்திக்காமலிருப்பதே நலம். ஆகையால் தமையனே! அவர் நான் ஜனகபுரிக்குப் புறப்படுவதன் முன்னம் வந்துவிட்டால் இரகசியமாக எனக்கு ஒரு வரி எழுதிவிடும். என் மேல்விலாசத்தை யளிக்கிறேன். நான் உங்களை மறுபடி காண்பது சந்தேகமானபடியால் இப்போதே உங்களுக்கும் உங்கள் மனைவிக்கும் புத்திரனுக்கும் ஆண்டவன் நல்லாசீர்வாத மளிக்குமாறு மனப்பூர்வமாகப் பிரார்த்திக்கிறேன்" என்றாள்.

அவள் உடனே ஒரு சீட்டில் தன் விலாசத்தையெழுதிக் கொடுத்துவிட்டுச் சென்றாள். மறுநாள் மாலை மூன்று மணிக்கும் நாலுமணிக்கும் இடையில் சிங்காரம் பிரபு வசிக்கும் வீட்டின் எதிரில் ஒருவண்டி வந்து நின்றது. கிருஷ்ணராஜு வண்டியிலிருந்து கீழேயிறங்கினான்.

சிங்காரமும் அவன் மனைவியாகிய உண்ணாமுலையும் அவனை மிக்க அன்போடு வரவேற்றார்கள். அவன் உண்ணாமுலையிடம் சற்று பேசியதும் அவள் அதிகமாகப் பேசக்கூடிய நிலைமையிலில்லை யென்பதை யுணர்ந்து அப்புறம் வந்துவிட்டான். பிறகு அவன் சிங்காரம் பிரபு விடம் தனியாகப் பேச உட்கார்ந்தபோது சிங்காரம் அவனைநோக்கி "நான் உனக்குக் கூறவேண்டிய சில சங்கதிக ளிருக்கின்றன" என்று கூறினான்.

கிருஷ்ணராஜு:—"என்ன நீ கூறுவது? உண்மையில் அப்பரிதாபமான மாதைப்பற்றி யல்லவென்று நினைக்கிறேன்" என்றான்.

சிங்:—"நீ யாரைக் கூறுகிறுய்? உன் மனைவியாகிய இராஜ சுந்தரியைப் பற்றியா?" என்றுன்.

கிருஷ்ணராஜு, 'ஆம்' என்றதே, சிங்காரம், "அப்படியாயின் இராஜ சுந்தரியைப் பற்றியே சில விஷயங்கள் கூறப் போகிறேன்" என்றுன்.

இம் மொழிகளைக் கேட்ட கிருஷ்ணராஜு மிக்க மனக் கலக்கமடைந்து, "அந்தோ! அவளைப்பற்றி என்ன நினைப்பதென்று எனக்கு விளங்கவில்லை. அவள் பித்தம் பிடித்து இப்படிச் செய்தாள் என்று அவள் விஷயத்தில் பரிதாபப் படுவதா? அல்லது மிக்க கொடிய இராக்ஷச குணமுடையவளென்று அவளைக்காணவும் அஞ்சி மறைந்துவிட வேண்டியதா? ஒன்றுமே எனக்குப் புலப்படவில்லை" என்றுன்.

சிங்காரம் பிரபு:—அய்யோ கடவுளே! உண்மை யப்படியல்ல. கிருஷ்ணராஜு! தயவுசெய்து உன் அபிப்பிராயத்தை யின்னும் ஒத்திவைக்கும்படி வேண்டிக்கொள்கிறேன். நீ யின்னும் உன் மனைவியின் மனோபாவத்தைப் பூரணமாக உணர்ந்து கொண்டதாக நான் நம்பவில்லை. இதுகாறும் அவளுடைய மனதின் ஆழத்தை நீ கண்டறியவில்லை. இப்போது நீ யதை யறியும்படி யுனக்கொரு அளவு கோலை யா னளிக்கக்கூடும்.

கிரு:—நீ கூறுவதன் அர்த்தமென்ன வென்று நான் மறுபடி யுன்னைக் கேட்கிறேன். இராஜசுந்தரி யிங்கு வந்திருந்தாளோ? ஏதேனும் விசேடம் நடந்ததோ? ஒளிக்காமற் கூறு.

சிங்:—"ஆம். இராஜசுந்தரி கடந்த இரவு இங்கு வந்திருந்தாள்" என்றுன்.

கிரு:—கடைசியாக நாங்கள் எத்தகைய நிலைமையில் பிரிந்துவிட்டோம் என்பதைப்பற்றி அவள் கூறினாளா?

சிங்:—இல்லை. ஒருசமயம் அவற்றைப் பற்றிக் கூறவே என்

ணினுள்போல் காணப்பட்டான்; ஆனால் மறுபடி சிந்தித்து அச்சமடைந்து விட்டாள். ஆனால் அவள் தன் கடந்த நடக்கைகளுக் கெல்லாம் இப்போது மிக்க மனஸ்தாபப்படுகிறுள் என்று தெரிகிறது.

கிரு:—இது என்னைச் சமாதானப் படுத்தும்படி உன்னைத் தூண்டுவதற்காக அவள் செய்யும் தந்திரஜாலமாக விருக்கும்.

சிங்:—இல்லையில்லை; விவகாரம் நீ கூறுவதற்கு நேர்மாருக விருக்கிறது. நானும் என்மனைவியுமே உங்கள் இருவர்க்கும் சமாதானம் உண்டுபண்ணுவதாக எவ்வளவோ கூறினேம். அவள் அதற்குச் சம்மதிக்கவில்லை. தான் உன்னைச் சந்திக்கவே கூடாதென்று அவள் கருதுகிருள். உங்கள் இருவர்க்கும் இப்போது பிரிவினை யேற்பட வேண்டியதே யென்பதைப்பற்றி அவளே மனப்பூர்வமாக விரும்புகிருள்.

கிரு:-அவள் முன்யோசனையோடு இம்மாதிரி தந்திரம்செய்ய வில்லை யென்று உனக்கு நன்ருகப் புலப்படுகிறதா? நிச்சயமாகத் தெரிகிறதா?

சிங்:—இல்லையில்லை. இதற்குமுன் அவள் எத்தகைய குற்றம் செய்திருந்தாலும், உன்னைக் கொல்லவே முயன்றிருந்தாலும், இப்போது அவள்மனதில் சூது எள்ளளவு மில்லை.

கிரு:—“அப்படியா? அப்புறம்? அப்புறம்? நீ கூறுவதைக் கூறு பார்ப்போம்” என்ருன்.

சிங்:—அவள் இதற்குமுன் எத்தகைய குற்றம் செய்திருந்தாலும் இப்போது அவள் மிக்க மனஸ்தாபப் படுகிருள். எங்களிடமும் குழந்தையிடமும் அவள்காட்டிய அன்பும், அவளுடையமனம் இப்போது மிக்கமாறுதலடைந்து விட்டதென்று காட்டுகிறது.

கிரு:—ஓ சிங்காரம்! உனக்கு அவளுடைய குணமும் அவள் தந்திர சாமார்த்தியமும் தெரியா. அவை வீண் வார்த்தைகளே.

சிங்:—“அப்படியல்ல. அவள் இங்கு என்னசங்கதி வெளியிட வந்தாளென்பது உனக்குத்தெரியுமா? அடடா! அவள் இதுகாறும் தவருக நடந்ததற்குத் தன்மனஸ்தாபத்தைக் காட்டவும் உண்ணுமுலேவிஷயமாகத் தான் தவருக நடந்து கொண்டதற்கு ஈடுசெய்வதற்காகவும் அவள் எத்தகைய தியாகம் செய்துகொள்ளத் துணிந்தாள் தெரியுமா—அது விஷயத்தில் அவள்செய்த தியாகத்தையும், காட்டும் அன்பையும் நினைத்தால் என் கண்களில் நீர்பெருகுகின்றது. கடந்த இரவு அவள் எங்களிடம் காட்டிய அன்பு அத்தகைய சத்தியமானது” என்ருன்.

கிரு:—“ஐயோ கடவுளே! சிங்காரம்! நீ கூறுவது உண்மைதானு? அவள்செய்த அத்தகைய தியாகம் என்ன? எனக்கு அதைப்பற்றி எள்ளளவும் விளங்கவில்லே. உன்வார்த்தைகள் எனக்கு மிக்க வியப்பையளிக்கின்றன” என்ருன்.

சிங்:—“அவள் கணவனுகிய நீ சம்மதமளித்தால் அவளுடைய திரண்ட ஆஸ்தியில் அவளுக்கு அவசியமான சொற்ப பாகம் நீங்கலாக மற்ற யாவும் என் மனேவிக்கும் எனக்கும் அளிக்கப்படும்” என்ருன்.

இம்மொழிகளேக் கேட்டதே கிருஷ்ணராஜு பிரமிப்படைந்தான். சற்று நேரத்திற்குள் ஒருவித நகைப்போடு “இல்லேயில்லே, அவளா? அவள் இத்தகைய காரியத்தைச் செய்கிறவளல்ல” என்ருன்.

சிங்:—“ஆயினும் அவள் இதைச் செய்தேயிருக்கிருள். இதோ பார் அவள் கூறியபடி இன்று காலே அவள்

தந்தையின் காரியதரிசிகளிடமிருந்து எனக்குவந்த கடிதம்" என்று கூறி, தனக்கு வந்த கடிதத்தைக் காட்டினான்.

கிருஷ்ணராஜு அக்கடிதத்தை வாங்கி வாசித்துப் பார்த்தான். அவன் அக்கடிதத்தை முழுமையும் வாசித்த பின் "அய்யோ கடவுளே! உண்மையில் நானே அவள் குணத்தை யறியாமல் தவருக நடந்துகொண் டிருந்தால் நானே கொடுமையாக நடந்து வந்ததாயின்—" என்முன்.

அதன்மேல் சிங்காரம் இராஜசுந்தரியின் வார்த்தைகள் யாவையும் சத்தியமென்றே நம்பியிருப்பதால் அவள் பட்சமாகவே வாதித்து, கிருஷ்ணராஜே தவருக நடந்து கொண்டதாகவும், தான் அதிகமாகக் காதலித்ததே தான் செய்த தப்பிதமென்று இராஜசுந்தரி கூறியதாகவும், அதற்காக மனைவியை வெறுப்பது தவறென்றும் கூறினன்.

கிருஷ்ணராஜு மனப்பூர்வமாக ஒருவர்க்கு மனவருத்தம் உண்டாக்கும் குணமுடையவனல்ல வாதலால், "ஓ கடவுளே! நானே தவருக நடந்து கொண்டிருந்தால் இதற்கு வழி எப்படி?" என்று பிரலாபித்தான்.

சிங்:—"இருவர் மேலும் குற்றம் இருக்கலாகும்" என்றியம்பினன்.

கிருஷ்ணராஜு "ஆம் ஆம்" என்று கலவரத்தோடு கூறினன். சிங்காரம் "அப்படியிருப்பினும் நீங்களிருவரும் ஒன்முய்ச் சேர்ந்து வாழ்வது சாத்தியமல்லவென்று உனக்குப் புலப்பட்டால் அப்படிச் செய்யவேண்டுமென்று நான் கூறமாட்டேன். கொஞ்சகாலம் பிரிந்தே யிருத்தல் நலம். ஆனல் எப்போதுமே கூடாமலிருப்பது ஒருபோதும் தகாது. அப்படியாயின், உன் மனைவி எவ்வளவு உதார குணத்தோடு, தான் எங்களுக்கு இந்த நன்மையைச் செய்வதாயினும் நான் இதை யேற்றுக்கொள்ள மாட்டேன்.

இராஜ சுந்தரியிடம் மெச்சத்தக்க குணங்களிருக்கின்றன வென்று இப்போதுதான் வெளிப்படுகிறது. நமது நாட்டு நியாயம்போல் இந்த விவகாரத்தை நாம் கவனிக்கலாகாது" என்றான்.

கிரு:—"இதையே நான் அடிக்கடி சிந்திக்கிறேன்" என்றான்.

சிங்:—"நீ ஆழ்ந்து இவ் விஷயத்தைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். ஒரு தேசத்திலுள்ள லௌகிக ஏற்பாடுகளுக்கும் மற்றொரு தேசத்திலுள்ளவைகளுக்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டு. அவள் அந்நிய நாட்டாள். அவர்கள் நாட்டில் மனைவிக்கும் புருடர்களுக்குமுள்ள சம்பந்தம் நம்நாட்டைப் போன்றதன்று" என்றான்.

அதன்பிறகு கிருஷ்ணராஜு "அவள் எங்கிருக்கிறாள்?" என்றதே சிங்காரம் அவள் விலாசத்தை யவனிடமளித்தான். கிருஷ்ணராஜு "நான் சீக்கிரம் வருகிறே"னென்று புறப்பட்டுச் சென்றான்.

---

## 182-வது அத்தியாயம்.

### இராஜசுந்தரியின் பொறுமைத்தீயும் கொடுங்கோலையும்—இராஜசுந்தரி, கிருஷ்ணராஜு இவர்களின் ஏககால முடிவு.

கிருஷ்ணராஜு வண்டியிலேறியதும் வண்டியை யதி வேகமாக விடும்படி சாரதிக்குக் கட்டளையிட்டான். அவன் அவ்வாறே யதிவேகமாக ஓட்டினான். வண்டி நகரின் மேற்குப் பாகத்திலுள்ள ஒரு ஹோட்டல் எதிரிற்போய் நின்றது. ஹோட்டல் நாணயமான ஹோட்டல். கிருஷ்ணராஜு வண்டியை விட்டு அவசரத்தோடிறங்கி ஹோட்டல் வாயிலில் நிற்கும் வேலைக்காரனை நோக்கி "இராஜசுந்தரி

என்ற ஒரு மாது இந்த ஹோட்டலில் தங்கியிருக்கிறாள். அவள் தன் அறையில் இருக்கிறாளா?" என்று வினவினன்.

வேலைக்காரன் "அய்யா! தாங்கள் கூறும் அந்தம்மாள் அறையில் இருக்கிறார்கள்" என்றான். கிருஷ்ணராஜு "என்னை யந்த அறைக்கு அழைத்துச்செல்; நான் அம் மாதைக் காணவேண்டும்" என்றான். வேலைக்காரன் "ஆனால், அய்யா! அந்தம்மாள் தான் தனியே யிருக்க விரும்புவதாக வும் ஒருவரையும் காணப் பிரியமில்லையென்றும் கூறியிருக்கி றார்கள்" என்றான்.

கிருஷ்ணராஜு "ஆயினும் என்னைப்பார்க்க விரும்பு வார்கள்" என்று கூறிக்கொண்டே அவன் காத்தில் இரண்டு ரூபாய் வைத்தான். பணத்தைக்கண்டதே வேலைக்காரன் முன்கூறிய ஆக்ஷேபனையை யடியோடு மறந்து உடனே கிருஷ்ணராஜை யழைத்துக் கொண்டுபோய் இராஜசுந்தரி யிருக்கும் அறையின் முன் விட்டான்.

அச்சமயம் கிருஷ்ணராஜின் மனதில் பலவிதக் குழப் பங்கள் உண்டாயின. அவ்வாறுண்டான மனச்சலனத் தால் அவன் ஒருவித மயக்கமடைந்து, அறையின் கதவைத் திறந்ததும் தள்ளாடிக் கதவைக் கெட்டியாய்ப் பற்றிக்கொண்டான். அச்சம்பவத்தால் தன்னைக்கண்டதே தன் மனைவின் முகத்தில் எத்தகைய மாறுதலுண்டாயிற்று என்பதை யவன் காணவில்லை.

வேலைக்காரன் கிருஷ்ணராஜை யங்கு விட்டதும் திரும்பிவிட்டான். கிருஷ்ணராஜு சமாளித்துக்கொண்டு நிமிர்ந்து நோக்கியபோது இராஜசுந்தரி மிக்க துயரமும் நாணமு மடைந்தவள்போலவும், தன் கணவன் என்ன கட் டளை யிடுகிறானோவென்று எதிர் பார்ப்பவள் போலவும் கீழே நோக்கிக்கொண்டு நின்றாள்.

கிருஷ்ணராஜு முன்னோக்கி அறைக்குள் சென்று

கொண்டே "இராஜசுந்தரி! நீ என்னை எதிர் பார்க்கவில்லை யல்லவா? அல்லது ஒருசமயம் நான் வருவேன் என்று எண்ணினையோ? எது உண்மை?" என்று வினவினான்.

மனைவி:—நீ இங்கு வருவாய் என்று நான் நம்பவில்லை. இப்போதும் உனக்கெப்படி நான் இருக்கும் இடம் தெரிந்ததென்று எனக்கு விளங்கவில்லை.

கிரு:—நான் சிங்காரம் பிரபுவைக் கண்டேன். அவர் உன் மேல் விலாசத்தை யெனக்களித்தார்.

இராஜ:—ஆ! சிங்காரம் பிரபுவா கூறினார். அப்படியும் அவரிடம் நான் என் இருப்பிடத்தை யுனக்கறிவிக்கவேண்டாமென்றே கூறியிருந்தேன். நான் உண்மையை மனம் விட்டுரைக்கிறேன். நாம் இருவரும் சந்திக்காமலிருப்பதே நலமென்று நான் கருதினேன்.

கிரு:—"சிங்காரம் பிரபு என்னிடம் உன் விலாசத்தை யளித்தது நல்ல எண்ணங்கொண்டே யன்றி வேறல்ல. ஆகையால் அவர் விஷயத்தில் நீ தவறாகக் கருதலாகாது" என்றான்.

இராஜ:—"சிங்காரம் பிரபுவின் கருத்து நான் ஜனகபுரிக்குச் செல்லும்போது எனக்கு ஏதேனும் கூறவேண்டியதைக் கூறட்டும் என்பதாகவிருந்தால், அவர் நல்ல எண்ணத்தோடு என் விலாசத்தை யுனக்குக் கூறினார் என்பது நிச்சயமே" என்றாள். கிருஷ்ணராஜு தன் மனைவியின் இனிய குரலையும் அவள் பேசிய மாதிரியையும் கண்டதும் மயங்கிவிட்டான். சாமார்த்தியம் பொருந்திய மாதர்களின் கபடசிந்தனை யறிவது சாத்தியமான காரியமல்ல.

கிருஷ்ணராஜு மனம் கரைந்தவனாய் "இராஜசுந்தரி! நான் உன் உறைவிடத்தைக்கண்டறிந்து கொண்டதற்காக நீ விசனப்படுகிறாயோ?" என்றான். தான் முன்பு அவள்

ஆஸ்தியைச் சிங்காரம்பிரபுவுக் களித்ததாய்க் கூறிய சங்கதி ஏதோ கபட எண்ணமாகவிருக்கும் என்று சந்தேகித்ததை யிப்போது மறந்து விட்டான்.

இராஜசுந்தரி "நீ என்னைத் தூஷிக்கவாராமல் இம்மாதிரி அன்போடு பேசவந்ததாய்த் தெரிகிறவரையில் நீ இங்கு வந்ததற்கு நான் விசனமடையமுடியாது. நான் இதை விட்டுச் செல்லுமுன் நீ என்னை மன்னித்துவிட்டதாகக் கூறுவதாயின் உன் நடக்கை மிக்க அன்பும் பெருந்தன்மையுமுடையதாக விருக்கும். என்னிடம் காட்டத்தக்கதைவிட நீ அதிக அன்புகாட்டியதாகும்" என்றாள்.

கிரு:—"ஆம். நான் உன்னைப் பூரணமாக மன்னித்துவிட்டதாகக் கூறவே இப்போது வந்தேன்" என்றான்.

இராஜ:-"ஆ! அப்படியாயின் நான் கொண்டிருந்த கோரிக்கை நிறைவேறிவிட்டது. இனி நான் எங்குசென்றாலும் என் இருதயத்தின்மே லிருந்த பெரும்பாரம் நீங்கிவிட்டதால் நிம்மதியாகவே யிருப்பேன். நீ செய்தது மிக்க உதாரத்துவமான செய்கை" என்றாள்.

நேயர்களே! இப்போது நடந்த சம்பவத்தைச் சுருக்கமாகவே நாம் கூறிவிடுகிறோம். கிருஷ்ணராஜன் தன் மனைவி பேசும் சாமார்த்தியத்தால் அவள் மனப்பூர்வமாகவே எல்லா விஷயங்களிலும் நடந்து கொள்கிறாள் என்று நம்பிக்கொண்டான். அதன்மேல் தன் மனைவியை நோக்கி,

"இராஜசுந்தரி! நீ யிப்போது உன் ஆஸ்தியை யவர்களுக்குக் கொடுத்துவிடுகிறாயே, 'பிறகு இதைப்பற்றி நீ மனவருத்தமடையமாட்டாயா?" என்றான்.

இராஜ:—அப்படியிராது. நான் அதற்காகச் சந்தோஷப்படுகிறேன் என்றே முன்னமே கூறினேனே.

கிரு:—ஆ! நீ அவர்கள் விஷயத்தில் நடந்துகொண்டமாதி

ரியேயென் மனதை யுன் விஷயத்தில் கரையச் செய்து விட்டது.

இராஜ:—இதைக்கேட்க நான் மிகவும் சந்தோஷமடைகிறேன். நீ யதில் கையொப்பமிடச் சம்மதிப்பாய் என்பது நிச்சயமேயென நம்புகிறேன். சீக்கிரத்தில் வேண்டிய பத்திரங்களனைத்தும் ஆயத்தமாய் விடும். இந்த நாட்டில் மனைவிமட்டும் அதிற் கையொப்ப மிட்டால் செல்லாது.

கிரு:—ஆகா. ஒருவருக்கு அதிலும் அவர்களுக்கு நீ செய்யும் நன்மையை நான் தடுக்கமாட்டேன். ஆயினும், எனக்கிருக்கும் ஆஸ்தியே நம்மிருவர்க்கும் போதுமானதல்லவா?

இராஜசுந்தரி இன்னும் முறிந்த மனமும் ஆழ்ந்ததுயாமுமுடையவள்போலவே "ஏன் எனக்கிருக்கும் சொல்பவருமானமே ஜனகபுரியில் வசிக்க எனக்குப்போதும்" என்றாள். கிருஷ்ணராஜு அவளிடம் பின்னும் மனக்கனிவடைந்து "நான் கூறுவது உனக்கு விளங்கவில்லைபோல் காண்கிறது. நடந்த விஷயங்களை யடியோடு மறந்து விடலாம். இனி நாம் ஒரு மித்து வாழலாம்" என்றான்.

இராஜ:—உனக்கு நான் செய்யவேண்டிய கடமைக்காகவே இதற்கு நான் மறுத்துக்கூறவேண்டி யிருக்கிறது. இது காறும் என்னால் உனக்குத் திருப்தியுண்டாகவில்லை. சந்தோஷமு முண்டாகவில்லை. நடந்த விஷயங்களால் இனி நீ என்னை நேசிப்பது அசாத்தியமாய்விட்டது. ஏதோ இச்சந்தர்ப்பத்தில் உண்டான மனநெகிழ்ச்சி நேராதிருந்தால் நீ என்னை யடியோடு வெறுப்பாய்.

கிருஷ்ணராஜு ஆத்திரத்தோடு "நான் உன்னை வெறுப்பதா? என்மேல் உனக்கிருந்த காதல் ஒழிந்துவிட்டதுபோலும்!" என்றான்.

இராஜ:—இல்லை யில்லை. அப்படியல்ல. பல வழிகளாக என் மனம் பசையற்றது போலாய் விட்டது. முன் போல் சந்தோஷமாகவிருக்க எனக்குப் பிரியமிருந்தாலும் மனோவல்லமையில்லை. இந்த மாறுதல் எதற்காக உண்டாயிற்றென்று எனக்குப் புலப்படவில்லை.

கிரு:—எல்லாம் நன்மைக்காகவே. அதற்குத் திருஷ்டாந்தமாக, இதுகாறும் அவர்கள் பெயரைக்கூடக் கேட்கவும் வெறுப்பாகவிருந்த என் சுற்றத்தார் விஷயத்தில் இப்போது நீ செய்த நன்மை யிருக்கிறதே........

இராஜ:—அது அற்ப விஷயம்; அதைப்பற்றி அடிக்கடி கூற வேண்டாம்; அவர்கள் விஷயத்தில் என் மனம் அவ்வளவு வன்மை யடைந்திருக்கவில்லை.

கிரு:—நடந்த விஷயங்களெல்லாம் இனி நமக்கொரு புத்திமதியாக விருக்குமென்று இப்போது விளங்கவில்லையா? நல்லது இராஜசுந்தரி! நாம் ஒருவருக்கொருவர் பரஸ்பர அன்புகாட்டும் சமயம் இன்னும் வரவில்லையென்று நீ கருதினால் நான் இன்னொரு ஏற்பாடு கூறுகிறேன் கவனிக்கிறாயா?

இராஜசுந்தரி 'கூறு' என்றாள். கிருஷ்ணராஜு "நீ ஜனகபுரிக்கு இப்போது போவதாயின் போ. உன் தந்தையின் காரியங்களையெல்லாம் ஒழுங்கு செய்துகொள். அவருடைய கல்லறையைத் தரிசித்துக் கண்ணீர்விடு. நாம் சிலமாதங்களுக்குமேல் பிரிந்திருக்கவேண்டியிராது. பிறகு நமது இருதயங்கள் ஒன்றுபட்டுவிடும்" என்றான்.

இராஜ:—நீ அவ்வாறு ஏற்பாடு செய்கிறாயா?

கிரு:—ஆம். உனக்கது சம்மதமா?

இராஜ:-நீ கணவன். உன் கட்டளைப்படி நான் நடக்கவேண்டியவள். இதுகாறும் நான் அப்படி நடந்துகொள்ள

வில்லை. இப்போது நீ இடும் கட்டளைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறேன்.

கிரு:—இப்போது கட்டளையென்ற வார்த்தையை யுபயோகிக்காதே. இது நாமிருவரும் மனமொப்பிச் செய்து கொண்ட நிபந்தனையென்று கருதவேண்டுமேயன்றிக் கட்டளையல்ல.

இராஜசுந்தரி மெதுவாகவே "ஆம்; நிபந்தனை" என்றாள்.

கிருஷ்ணராஜு சந்தோஷமடைந்து "இப்போது நமக்குள் சமாதானம் நிலைத்து விட்டது. நாம் இந்நிபந்தனையைப் பழுது செய்யலாகாது. ஏன் இராஜசுந்தரி! இப்போது இவையாவும் நமது பரஸ்பர நன்மைக்கே ஏற்பட்டன. சில மாதங்களே நாம் பிரிந்திருப்போம். சரி போதும். இச்சங்கதியை இதோடு நிறுத்துவோம். இனி இப்பொழுதை இருவருமாகச் செலவழிப்போம். நீ இன்னம் இராப்போஜனம் செய்யவில்லையே?" என்றான்.

இராஜசுந்தரி "சற்று முன் வரையில் நாம் இருவரும் ஒன்றாகப் போசனம் செய்வதெனின் அது கேலிப்பேச்சேயென்று எண்ணியிருப்போம். இனிப் போஜனம் வட்டிக்கச் சொல்லலாம்" என்றாள்.

கிருஷ்ணராஜு உடனே ஹோட்டல்காரனை யழைத்து ஆகாரம் பரிமாறும்படி கட்டளையிட்டான். சற்று நேரத்திற்குள் இருவரும் போஜனம்செய்யத் தொடங்கினார்கள். போஜனம் செய்யும்போது சாதாரணமான விஷயங்களைப்பற்றியே சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள். பதார்த்தவகைகள் முதலிய போசன பண்டங்களனைத்தும், புசித்தானதே திராக்ஷாசபானம் பழவகைகள் பலகாரங்கள் பரிமாறப்பட்டன. அதன்பின் பரிமாறுவோன் போய்விடவே புருடனும் மனைவியும் ஏகாந்தமாகவே உட்கார்ந்து பானம் செய்யத்தொடங்கினார்கள்.

அந்தோ! மனிதன் மற்றெல்லாமாயையைக் காட்டிலும் ஸ்திரீயின் மாயையிலேயே சுலபமாகவும் பலமாகவும் சிக்கிக்கொள்கிறான். கிருஷ்ணராஜுவிடம் சிங்காரம் பிரபு இராஜசுந்தரி தங்களுக்குச் செய்த நன்மைகளைப்பற்றிக் கூறியபோது கிருஷ்ணராஜு கொஞ்சத்தில் தன் மனைவி அவையாவும் மனப்பூர்வமாகவே கூறினாளென்று நம்பவில்லை. அவளிடம் கபடம் சூது அதிகமாக விருப்பதும் கொலைசெய்யவும் அஞ்சாத மனமிருப்பதும் அவனுக்குத் தெரியுமாதலால், ஏதோ ஒரு உட்கருத்துக்கொண்டே இப்படி நடந்துகொண் டிருக்கிறாளென்று கருதினான். ஆனால் அவள் எதிரில் வந்தபோது அவையாவும் அடியோடு அவன் மனதினின்றும் நழுவிவிட்டன. அவள் வார்த்தைகள் யாவும் சத்தியவாக்கெனத் தோன்றின. அந்தோ! ஸ்திரீயின் மாய்கை யத்தகையதாக விருப்பதால்தான் ஆன்றோர் அதைக் கட்டாயம் விலக்க வேண்டுமென்று கூறியிருக்கின்றார்கள்.

கிருஷ்ணராஜுக்கு இராஜசுந்தரி கிண்ணம் கிண்ணமாகத் திராக்ஷாபானத்தைக் கொடுத்துக்கொண்டும் தானும் கொஞ்சம் கொஞ்சம் பருகிக்கொண்டு மிருந்தாள். இருவரும் சந்தோடமாக வார்த்தையாடிக் கொண்டிருக்கையில் கிருஷ்ணராஜு தன் மனைவியை நோக்கி,

"ஓ! நீ திரும்பிவந்தபின் நாம் இருவரும் மிக்க சந்தோஷமாக வாழ்வோம். நீ வருவதற்குள் நான் இங்கு ஒரு அழகிய வீடு வாங்கி அதை நன்றாயலங்காரம் செய்து வைப்பேன். நீவந்தபின் நாம் உண்ணாமுலையின் வீட்டிற் கருகிலேயே வசிப்போம். அவர்களும் நாமும் மிக்க அன்னியோன்னியமாக விருப்போம். அடிக்கடி அவர்கள் நம் வீட்டிற்கு வருவார்கள். நாம் அவர்கள் வீட்டிற்குச் செல்வோம். நமக்குக் குழந்தையுண்டாகும்வரை யவர்கள் குழந்

தை நமது குழந்தையாகவே யிருக்கும். ஓ! மிக்க சந்தோஷ மாகவே நாம் காலங்கழிப்போம்" என்றான்.

இராஜ:—நீ கூறுவது மிக்க சந்தோஷமான மனோராஜ்ஜிய மாக விருக்கிறது.

இவ்வாறு இவர்கள் சம்பாஷித்துக் கொண்டே யிருக் கையில் கிருஷ்ணராஜனுக்குத் தன் தேகசுகத்தில் ஒருவித வித்தியாசம் தோன்றியது. அவனுக்குப் புழுக்கமாக விருப் பதுபோல் தோன்றியது. ஆனால் அவன் அதைத் தன் மனைவி யிடம் கூறியபோது அவள் "இங்கு காற்று குறைவா யிருக்கும். அதிருக்கட்டும். நான் சென்றபின் நீ யுன் காலத் தைச் சுகமாகக் கழிப்பாயல்லவா?" என்றாள்.

கிருஷ்ணராஜன் களங்கமற்றமனதோடு "ஆகா! பூரண சந்தோஷத்தோடிருப்பேன். ஏனெனில், நீ கூடிய சீக்கிரம் வந்துவிடுவாய்என்ற நம்பிக்கை யெனக்கிருக்கிறது. அதோடு நான் அடிக்கடி என் காலத்தை உண்ணாமலை சிங்காரம் பிரபு இவர்கள் கூட்டத்தில் கழிப்பேன்." என்றான்.

இராஜ :—" ஆம் அடிக்கடி. சந்தேகமின்றி " என்றாள்.

அச்சமயம் அவள் கண்களில் ஒரு வித தீட்சணியமான ஜொலிப்பு தோன்றியதாகக் கிருஷ்ணராஜனுக்குப் புலப்பட் டது. ஆனால் அவன் "ஓ! இது நமது மனோபாவம்போலி ருக்கிறது" என்று அதைத் தள்ளி விட்டான். "ஆம் நான் அவர்கள் சகவாசத்தில்தான் அதிகமாக விருப்பேன். அன் னியர் கூட்டத்திற்குச் செல்லேன். நீ சீக்கிரம் வந்து விடு வாய். பிறகு நாம் ஒன்றாயிருப்போம்" என்றான்.

அந்தோ! அச்சண்டாளியின் மனதில் அவன் தன் வரு கையைப்பற்றிக் கூறியசங்கதிகளனைத்தும் சற்றேனும் உறுத் தவேயில்லை. அவன் உண்ணாமலையின் குடும்பத்தோடு அடிக் கடி சம்பந்தப்படுவதாகக் கூறியதே அவள் மனதில் எரிச் சலை யுண்டாக்கிவிட்டது. அதைக் கிருஷ்ணராஜன் உணா

லில்லை. ஆகையால் "நீ உண்ணுமுலையைப் பூரணமாக நேசிக்கிருயல்லவா?" என்ருன்.

இராஜ:—ஆ! ஆம். நான் அவளை யெப்படி நேசிக்கவேண்டுமோ அப்படி நேசிக்கிறேன்.

கிருஷ்ணராஜு அவள் வார்த்தையை யூகித்துணராமல் அதைச் சந்தோஷமான விதமாகவே பொருட்படுத்திக் கொண்டு, "ஆம். நீ உண்ணுமுலையை யுன் சகோதரி போலவே நேசிக்கிருய். ஆ! நான் அடிக்கடி அவள் குழந்தையை யென் கரத்தில் எடுத்துக்கொள்வேன்...அப்போது ..." என்பதற்குள் பொருமைத்தீயால் எரிந்துகொண்டிருக்கும் மனமுடைய அந்தத் துரோகி அதற்குமேல் அவன் கூறுவதைக் கேட்கமனமில்லாமல் "ஆம் ஆம். நீ யடிக்கடி அக்குழந்தையை யெடுத்துக்கொண்டு கொஞ்சுவாய். அது எனக்கு நன்ருகத் தெரியும். நீ அக்குழந்தையின் தாயை நேசிப்பது போலவே அக்குழந்தையையும் நேசிக்கிருய்" என்ருள்.

அச்சமயம் அவள் கண்களில் தோன்றிய தீட்சணியமான ஜொலிப்பால் கிருஷ்ணராஜின் மனதில் பெருஞ்சந்தேகமும் கலவரமும் அடைந்து,

"ஓ! இராஜசுந்தரி! நமக்குள் ஏதேனும் தவறு உண்டாய்விட் டிருக்கிறதோ? அய்யோ கடவுளே! நான் இப்போது ஏமாற்றப்பட்டதாயிருந்தால்..." என்ருன்.

இராஜசுந்தரி:—நான் சில மாதங்கள் உன்னை விட்டுப் பிரிந்திருப்பேன் என்று நீ கருதுவது உன்னை நீயே யேமாற்றிவிட்டதைப் போலாகும்" என்ருள்.

அச்சமயம் அவள் முகத்தில் உண்டான அகோரமான மாறுதலைக்கண்ட கிருஷ்ணராஜு மிக்க திகிலடைந்து "ஓ இராஜசுந்தரி! என்ன இது? உன்முகத்தில் இத்தகைய பயங்கரமான மாறுதல் உண்டாகியிருக்கிறதே." என்ருன்.

இராஜசுந்தரி தன் கண்களில் மிக்க தீட்சண்யமான பார்வையோடு "ஓ! இதெல்லாம் உண்மை யென்றே நீ எண்ணி யிருக்கிருயோ? நான் செய்த காரியமனைத்தும் மனப்பூர்வமாகக் கூறப்பட்ட தென்று கருதுகிருய்?" என்ருள்.

இம்மொழிகளைக் கேட்டதே, கிருஷ்ணராஜ‍ன் "அய்யோ கடவுளே! என்ன நீ கூறுவது?" என்ருன். இப்போது அவன் மனதில் பெரிய சந்தேகமும் பீதியுமுண்டாயிற்று. அவன் இதற்குமுன் அளவுமீறிக் குடிப்பவனுயினும் இச்சமயம் மிக்க நிதானமாகவே திராட்சரசபானத்தைப் பருகி யிருக்கிருன். அது அவனுக்கும் தெரியும்.

இராஜ:—"நான் உன்னைவிட்டுப் பிரிவதைவிட என் பிராணனை விட்டுவிடுவேன்; அந்த நினைப்பே என்னைக் கொன்றுவிடும். நீ மறுபடி அந்த உண்ணுமலையின் சகவாசத்தில் காலங்கழிக்கும்படி நான் இடங்கொடுப்பேனென்று கருதினுய்? ஒருகாலுமில்லை" என்ருள்.

இதைக்கேட்டதே கிருஷ்ணராஜ‍ன் "நாம் பெருமோசத்திற் குள்ளாகிவிட்டோம். என்னமோ பெரிய விபரீதம் நடக்கப்போகிறது" என்று எண்ணிக்கொண்டு,

"ஓ! இராஜசுந்தரி! நீ என்னகாரியம் செய்தாய்? நீ அவர்களுக்கு உன் ஆஸ்தியை வைப்பதாகக் கூறியது..." என்ருன். அவையாவும் சூதேயென்று அவள் புத்தியிற் பட்டுவிட்டதால் அதற்குமேற் கூற அவனுக்கு நாவெழவில்லை.

இராஜ:—"ஓ! என்னை மன்னிக்க வேண்டும்; நான் அவர்களுக்கு என் ஆஸ்தியை வைப்பதாகக்கூறியதும், மற்ற வார்த்தைகளும் நான்செய்த ஒரு தந்திரமே. நீ தனியாக என்னிடம் வரவேண்டு மென்பது என்விருப்

பம். கடைசியில் நான் கருதியபடி என் தந்திரம் பலித்தது. நான் அவ்வாறு நடந்து கொண்டதால் தான் நீ இப்போது என்னிடம் வந்தாய்''! என்றாள்.

கிரு:—“ஆ துரோகி! இதென்ன என்தேகத்தில் ஒருவித எரிவந்தமும் அபூர்வமான உணர்ச்சியும் தோன்றுகின்றனவே! ஓ கடவுளே! உண்மையைக் கூறு, ஆ! விஷம், அய்யோ கடவுளே! நான் அடியோடு மோசம் போய் விட்டேன்” என்றான்.

இராஜ:—“என் அன்பார்ந்த நாயகரே! தங்கள் பிரிவைச் சகிக்கவாவது, தங்கள் அன்பில் எள்ளளவை யேனும் அந்த உண்ணுமுலையாவது அவள் குழந்தையாவது பெறுவதைக் கண்டு சகிக்கவாவது என்னால் முடியாது. நீர் என்னைவிட்டுப் பிரிவதாகக் கூறாமலும், என்னை ஜனகபுரிக்குப் போகச்சொல்லாமலும் இருந்தால் இந்த விஷயம் நேரிட்டிராது. உமது அன்பில் இன்னொருவர் எள்ளளவேனும் பெறப்பார்ப்பதைவிட நாம் இருவரும் ஏககாலத்தில் இறந்துபோவது எனக்கு மிக்க சந்தோஷம்” என்றாள்.

கிருஷ்ணராஜு மிக்க துயரமும் மனக் கொதிப்புமடைந்து “ஏ சண்டாளி! புருடனைக்கொல்லத் துணிந்த பாவி. நீ என்ன பாஷாணம் எனக்குக்கொடுத்திருக்கிறாய்? உடனே உண்மையைக் கூறு. அதன் முறிப்பு என்ன” என்றான்.

இராஜ:—“ஓ! என் கணவரே! என்னை மன்னிக்கவேண்டும். இந்தப் பாஷாணத்தை யருந்தியகாலம் மீறிவிட்டதால் இனிமுறிப்பால் பயனில்லை; ஓ நாம் இருவரும் இப்படி ஒன்றாய் மரிப்பது சந்தோஷம்” என்றாள்.

கிருஷ்ணராஜு சொல்லொணாத மனோவேதனையும் கோபமுமடைந்து “ஓ பரமசண்டாளி! உடனே ஒருவயித்

தியரை யழைத்துவா" என்றான். இராஜசுந்தரி "விஷம் சும் முடலிலேறி நெடுநேரமாய்விட்டது; இனிவயித்தியரை யழைப்பதில் பயனில்லை" என்றாள். கிருஷ்ணராஜு மிக்க கோபாவேசத்தோடு "ஆ பெண் எமனே!" என்று அவளை யடிக்க எழுந்திருக்கப் போனான்; எழுந்திருக்க முடியாமல் ஆசனத்தில் சாய்ந்து விட்டான்.

அதைக்கண்ட இராஜசுந்தரி "ஆஆ! என் அன்பார்ந்த கணவரே! போய்விட்டீரா! இதோ சீக்கிரம் நானும் வருகிறேன், வருகிறேன்..." என்று குழறிக்கொண்டே வீழ்ந்து விட்டாள்.

அச்சமயம் இரவு பத்துமணி யிருக்கும். ஒருவாலிபன் மிக்க கலக்கத்தோடும் அவசரத்தோடும் சிங்காரம் பிரபு வசிக்கும் வீட்டின் கதவைத் தட்டினான். சிங்காரஞ்சென்று கதவைத் திறந்ததும் அவன் "பிரபுவே! எங்கள் எஜமான் இங்கிருக்கிறாரா?" என்றான். வந்தவன் கிருஷ்ணராஜின் வேலைக்காரன் என்பதை யறிந்ததே சிங்காரம் அவன் கலக்கத்தைக்கண்டு "வாலிபனே! உன் எஜமான் இங்கிருந்து மாலை ஐந்து மணிக்குச்சென்றார்..." என்றதும் அவன் பின்னும் கலக்கமடைந்து "அந்தோ! அவர் வீட்டிற்கு வரவில்லையே! இரவு லாயர் வரதப்பிள்ளையைப் போஜனத்திற்கு வீட்டிற்கு வரும்படி கூறியிருந்தார். இரண்டு மூன்றுபேர்களுக்கு போஜனம் ஆயத்தம் செய்யப்பட்டிருக்கிறது. இவர் எங்குப் போய்விட்டாரோ? என்ன சங்கதியோ? தெரியவில்லையே" என்றான்.

சிங்காரம் "தம்பி! நீ கலவரப்பட ஒருகாரணமுமில்லை; உன் எஜமாட்டி அங்கு வந்திருக்கிறார்கள். உன் எஜமானும் அவர்கள் இருக்கு மிடத்திற்குச் சென்றிருக்கிறார்" என்றதே வேலைக்காரன் இராஜசுந்தரி இருக்குமிடத்தைக் கேட்டறிந்து கொண்டு துரிதமாக அங்குச்சென்றான்.

அவன் மனதில் ஒருவித பீதியுண்டாய் விட்டது. ஏனெனில் ஒரு பெரியமனிதருக்கு விருந்தளிப்பதாகக் கூறிவிட்டு எவனேனும் சுயபுத்தியோடு இப்படிப் பேசாமல் இருந்து விடுவானே? என்பதொரு சந்தேகம்; அதோடு கிருஷ்ணராஜனுக்கும் அவன் மனைவிக்கும் நடந்த விஷயங்களெல்லாம் அவனுக்குத்தெரியும். முன்பவள் அவனைச்சுட்டுவிட முயன்றதும் தெரியும். இவற்றால் திகிலோடேயே சென்று இராஜசுந்தரி யிருக்கும் ஹோட்டல் வேலைக்காரனை விசாரித்தபோது அவன் புருடனும் மனைவியுமிருக்கு மறையைக் காட்டினான்.

கதவை என்னதட்டியும் சந்தடியில்லை. அழுத்தித் திறக்க முயன்றபோது உட்பக்கம் பூட்டப்பட்டதாய்த் தெரிந்தது. இருவரும் அச்சமயம் வீதியிற்சென்ற ஒரு போலீஸ்காரனை யழைத்து மூவருமாகக் கதவை நெக்கியுடைத்து உள்ளே சென்றுபார்த்தபோது கிருஷ்ணராஜனும் இராஜசுந்தரியும் சவமாகக் கிடக்கிறார்கள்.

## 183-வது அத்தியாயம்.

சென்னாரில் தேவராஜின் தாயாரின் மனவேதனையும் அவள் ஸ்மரணையற்று வீழ்தலும்—சுந்தராபாயும் வரதராஜனும்—விளம்பரமும் அநுகூலமும்.

இப்போது நாம் சென்னாரில் நடக்கும் விஷயங்களைக் கவனிப்போம். அங்குநமது தேவராஜனுப்பிரபுவுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டிருக்கிறதென்றும், அவன் தன் சுற்றத்தார்க்கும் நண்பர்களுக்கும் கடிதங்கள் எழுத அநுமதி யளிக்கப்பட்டதென்றும் கூறியிருந்தோம்.

தேவராஜைத்தண்டித்த இராணுவ நீதிச்சபையின் தலைவருடைய வாசஸ்தலம் விசாரணைநடந்த நகரமண்டபத்

திற்கெதிரிலேயே யிருக்கிறது. அந்த ஜெனராலுடைய மனைவி சுமார் பத்து வருடங்களுக்கு முன்பே காலம் சென்று விட்டாள். அவருக்கு இரண்டு புத்திரிகள் மட்டுமுண்டு. அவர்களுக்கு இலட்சுமி என்றும் மாரகதம் என்றும் பெயர். இருவரும் காண்போர் மகிழ்ச்சியடையத்தக்க வனப்பு வாய்ந்தவர்கள். அவர்கள் குணங்கள் அவர்களுடைய தந்தையின் குணத்திற்கு நேர்மாறானவை. இருவரும் சாந்தமும் தயையும் சிவகாருண்யமு முடையவர்கள்.

அன்று செல்வம் பொருந்தியவரும் அழகுவாய்ந்தவருமாகிய ஒரு வாலிபப்பிரபு இராஜத்துரோகக் குற்றத்திற்காக விசாரிக்கப்படப்போகிறார் என்பதைக் கேட்டதே அவர்கள் அதைப்பற்றி மிக்க கவனமுடையவர்களானார்கள். தேவராஜின் குணங்களைப்பற்றியும் அவன் நிலைமை முதலியவற்றைப்பற்றியும் அதிகமாக விசாரித்தார்கள். அவர்கள் வேண்டுமாயின் தங்கள் தந்தையின் அனுமதிபெற்று விசாரணை நடக்குமிடத்திற்குச் சென்று பார்த்திருக்கலாம். ஆனால் ஒழுக்கத்தைக் கருதி, அவர்கள் அப்படிச் செய்யவில்லை. அவர்களிருவரும் தங்கள் மாடியின்மேல் எதிரிலுள்ள நகரமண்டபத்தைப் பார்த்ததுபோலிருக்கும் அறையின் சாளரத்தருகிலுட்கார்ந்து திரையை நீக்கி அதன் சந்து மூலமாகத் தேவராஜுவை விசாரணை ஸ்தலத்திற்கு அழைத்துவந்தபோது பார்த்தார்கள். அவன் வண்டியினின்றும் இறக்கப்பட்டுக் கட்டிடத்திற்குள் அழைத்துக்கொண்டு போகப்பட்டபோது அவன் முகத்தை இருவரும் பார்த்தார்கள்.

உடனே இருவர்க்கும் தாங்கள் அவனைப்பற்றிக் கேள்விப்பட்ட நல்ல விஷயங்களனைத்தும் உண்மையே யென்று புலப்பட்டது. இருவர்க்கும் அவன்மேல் மிக்க இரக்கமுண்டாயிற்று. ஆனால் அவர்களுக்குண்டாகிய மன

நெகிழ்ச்சி பரிசுத்தமானதே. அவர்களிருவரும் அழகு வாய்ந்த வாலிபர்களான இரண்டு இராணுவ உத்தியோகஸ்தர்களை மணம்புரிய நிச்சயிக்கப்பட்டிருந்ததால் அவர்கள் மனம் வேறுவித எண்ணம் கொள்ள நியாயமில்லை.

இலட்சுமி தன் சகோதரியை நோக்கி, "அந்தோ! மரகதம்! இத்தகைய உத்தமனை அழகிய வாலிபன் எங்கேனும் அக்குற்றத்தைச் செய்திருப்பானோ! இதை நினைக்கும் போதே மனம் பதறுகிறதல்லவா?" என்றாள். மற்றவள் "அய்யோ! எனக்கு இதை நினைக்கும்போதே தேகம் நடுங்குகிறது. அதிலும் நமது தந்தையே தமது வாயில் இத்தகைய புண்ணிய புருஷனுக்கு மரணதண்டனை விதிக்கப்போகிறார் என்பதை நினைக்கும்போது நாம் ஏன் இக்குடும்பத்தில் பிறந்தோம் என்று தோன்றுகிறது" என்றாள்.

இலட்சுமி:—"இவர்மேல் குற்றம் ருசுப்படுத்தப்பட்டு இவர் தண்டிக்கப்படுவார் என்று கருதுகிறாயா? ஏனெனில் தண்டனை விதிக்கப்பட்டால் அது உடனே ஆலசியமின்றி நிறைவேற்றப்படும். நமது தந்தை இத்தகைய விஷயங்களில் மிக்க கண்டிப்பானவர்" என்றாள்.

மரகதம்:—இதன்றி அரசரிடமிருந்து நமது தந்தைக்கு இந்த விஷயத்தைப்பற்றி மிக்க கண்டிப்பான கட்டளை வந்திருக்கிறது. இவர் தமது மனப்போக்கின்படி எதையும் செய்ய எள்ளளவு அனுமதிகூட அக்கட்டளையில் அளிக்கப்படவில்லை. அதே மிகக் கொடியது. ஆயினும் அவ்விஷயம் நாம் கேள்விப்பட்டபடி ருசுவாகாமல் வேறுவிதமாக மாறிவிடுமென்று நம்புகிறேன். அவ்வாறே முடியவேண்டுமென்று நாம் பிரார்த்திப்போம். அந்தோ! இவ்வாலிபப்பிரபு நமது சகோதரராக விருந்தால் இப்போது நமது மனம் எவ்வளவு வேதனைப்படும்?

இலட்சுமி:-அந்தோ! இந்தப் பிரபுவிற்குச் சகோதரர் சகோதரிகள் இருக்கிறார்களோ என்னமோ. இருந்தால் அவர்கள் மனம் என்ன வேதனையடையும்?

இவர்கள் அங்கு உட்கார்ந்து இவ்வாறே சம்பாஷித்துக் கொண்டும் இடையிடையில் அப்பிரபு விடுதலையடைய வேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டும், நடக்கும் விசாரணையின் முடிவை மிக்க ஆவலோடு எதிர் நோக்கிக்கொண்டிருந்தார்கள். சுமார் இரண்டுமணிநேரங் கழிந்தது. அச்சமயம் திடீலென்று ஒரு வண்டி அங்குவந்து நகரமண்டபத்தை நெருங்கியது. வெளியில் குழுமியிருந்த ஜனங்கள் விலகி அதற்கு வழிவிட்டார்கள்.

இலட்சுமி "ஆ! ஒருவண்டி; யாரோ வந்திருக்கிறார்கள். ஜனங்கள் வண்டியைச் சூழ்ந்துகொண் டிருக்கிறார்கள்" என்றாள்.

மரகதம்:—"ஆ! வண்டியிலிருப்பவள் ஒருஸ்திரீ-அம்மனிதர் வண்டிக்குள் பாய்கிறார். ஆ! அம்மாது யாரோ இதில் சம்பந்தப்பட்டவளாகவே யிருக்கவேண்டும்" என்றாள்.

மற்றவள்:—"ஆ! அந்தம்மாளை வெளியில் தூக்கிக்கொண்டு செல்கிறார்கள். ஓ! அந்தம்மாள் மூர்ச்சையடைந்து விட்டாள். அவள் அப்பிரபுவின் நெருங்கிய சுற்றத்தாளாக விருக்கவேண்டும்" என்றாள்.

மரகதம் "இலட்சுமி! இச்சமயம் நாம் அம்மாதுக்கு இங்கு இடமளித்துக் காப்பாற்றுவோம்" என்றாள்.

இலட்சுமி "ஆகா! அப்படியே செய்யலாம்" என்றாள். சகோதரிகள் இருவரும் தங்கள் வீட்டு வேலைக்காரியை யழைத்து அந்த மாதை நமது மாளிகையில் கொண்டுவந்து தக்க உபசாரம் செய்யவேண்டுமென்று கட்டளையிட்டார்கள்.

வெளியில் வண்டியில் வந்திருந்தமாது "தேவராஜப் பிரபு விசாரணை செய்யப்படுகிறார், ஆனால் அவர் மரண

தண்டனையிலிருந்து தப்புவது அரிது" என்றதைக் கேட்டதும் மரணத்திற்குச் சமதையான மூர்ச்சையடைந்து விட்டாள். அருகிலிருந்த ஜனங்கள் அம்மாதையெங்குக்கொண்டு போவதென்று ஆலோசனை செய்தார்கள். அருகில் ஹோட்டல் ஒன்றுமில்லை. யாவரும் மிகக் கலக்கமடைந்திருக்கும் சமயத்தில் ஜெனரலின் புத்திரிகள் அனுப்பிய வேலைக்காரி அங்குச்சென்று "இந்த மாதை எங்கள் எஜமானிகள் மாளிகைக்கே கொண்டுவரச் சொன்னார்கள். உடனே கொண்டு வாருங்கள்" என்றாள். உடனே அங்கிருந்தவர்களில் சிலர் அம்மாதை மாளிகையிலிருந்து கொண்டுவரப்பட்ட ஒரு மஞ்சத்தின்மேல் கிடத்தி மாளிகைக்கு எடுத்துச் சென்றார்கள்.

சகோதரிகளின் கட்டளைப்படி உடனே ஒரு வைத்தியர் வரவழைக்கப்பட்டார். அவர் வருவதற்கு முன்பே சகோதரிகள் அம்மாதுக்குத் தக்க உபசாரம் செய்யத் தொடங்கினார்கள். வைத்தியர் வந்த சற்று நேரத்திற்கெல்லாம் அம்மாதுக்குக் கொஞ்சம் ஸ்மரணை வந்ததும் கண்களைத் திறந்து தன் முன் நிற்கும் அழகிய கன்னியர்களைக் கண்டாள். ஈன சுரமாக "ஆ இதெல்லாம் கனவு; பயங்கரமான கனவே" என்றாள். "ஆயினும் பூரண ஸ்மரணை யுடனே வரவும் எல்லாம் உண்மையே யென்று புலப்பட்டது. "ஓ! என் மகனே! மகனே!" என்று பிரலாபித்தாள்.

சகோதரிகள் "அம்மா! உங்களுக்கு ஏதேனும் வேண்டியிருந்தால் கூறுங்கள்" என்றார்கள். அம்மாது "அம்மா! உங்களுக்கு மிக்க வந்தனம். கடவுள் உங்களுக்கு நல்ல ஆசீர்வாதமளிப்பார். நான் அவ்வாலிபனுடைய தாயார்" என்றாள். அதற்கு மேல் கூறமுடியாமல் கதறியழுதாள்.

சகோதரிகளும் மனங்கரைந்து கண்ணீர் விட்டார்கள். வைத்தியர் மனமும் இளகி விட்டது. ஆயினும் அவர்கள் எவ்விதத்தேறுதலும் கூறுவதற்கில்லை. நடக்கும் விசாரணை

யில் எல்லா விவகாரங்களும் குற்றவாளிக்கு விரோதமாகவே செல்கின்றன வென்று தெரிந்து கொண்டிருக்கிறார்கள். சற்று முன்புதான் தேவராஜின் தாயார் மூர்ச்சை தெளியு முன் வைத்தியரே அச்சங்கதியை யவர்களிடம் கூறினர்.

தேவராஜின் தாயார் அவர்களை நோக்கி "என் புத்திரனை விசாரிக்கிறாரே அந்த ஜெனரல் இரக்க முள்ளவரா? தயவு செய்து கூறுங்கள்" என்றாள்.

வைத்தியர் "அம்மா! இந்த இரண்டு கன்னிகைகளும் அந்த ஜெனரல் புத்திரிகளே" என்றார்.

இம்மொழிகளைக் கேட்டதே அம்மாதின் மனதில் சற்று தேறுதல் உண்டாயிற்று. அவள் "ஆ! இத்தகைய இரக்கமும் பரோபகார சிந்தையுமுள்ள கன்னிகைகளின் தந்தையால் என் புத்திரன் விசாரிக்கப் படுவதாயின் நான் நம்பிக்கை யிழக்கவேண்டியதில்லை" என்றாள்.

அவள் கூறியதைக் கேட்ட சகோதரிகள் மனதில் துயரமடைந்தார்கள். அவர்கள் அச்சமயம் ஒரு புறமாக முகத்தைத் திருப்பிக்கொண்டதால் அம்மாது அதைப் பார்க்கவில்லை. வைத்தியர் மிக்க நன்றி யுடையவரானதால் "இம்மாது வீணன நம்பகம் வைத்துக்கொள்ள இடந்தரலாகாது" என்று கருதி "அம்மா! இத்தகைய சந்தர்ப்பத்தில் இந்த இராணுவ நியாயாதிபதி தன் பிரியப்படி ஒன்றுமே செய்யச் சக்தியுடையவரல்ல. அந்த நியாயசபையில் இன்னும் நால்வரிருக்கிறார்கள். அவர்களில் இவரும் ஒருவராக அபிப்பிராயம் கொடுக்கவேண்டியவரே யொழிய இவர் தாமே ஒன்றும் செய்யச் சக்தியுடையவரல்ல." என்றார்.

சகோதரிகளும் தங்கள் துயரத்தை வெளியிட்டார்கள். அம்மாது "ஆம் ஆம். தாங்கள் கூறுவது உண்மையே" என்று கூறிவிட்டுச் சகோதரிகளை நோக்கி

"குழந்தைகளே! இந்த விவகாரம் எப்படி முடிந்தாலும், நேர் விரோதமாய் முடிந்தாலும் சரி. நீங்கள் என்னிடம் காட்டிய அன்பிற்காக நான் எப்போதும் நன்றியுடையவளாகவே யிருப்பேன் என்பது உண்மை" என்ருள்.

அச்சமயம் நகரமண்டபத்திற்கெதிரிலிருந்த ஜனக்கூட்டத்தில் ஏதோ குழப்பம் நேர்ந்ததைக்கண்டு வைத்தியர் சாளரத்தருகில் சென்று பார்த்தார். தேவராஜின் தாயார் தீர்ப்புக்கூறி முடிந்ததென்று கருதி எழுந்து சாளரத்தை நோக்கிச் செல்லத்தொடங்கினுள். அதற்குள் வைத்தியர் திரும்பி,

"இல்லையில்லை. ஒரு விசேஷமுமில்லை. புதிதாக ஏதோ ஒரு விளம்பரத்தை யொருவன் கொண்டு வந்து ஒட்டுகிருன். அதைப்பார்க்கவே ஜனங்கள் அப்படி மேல் விழுந்து செல்கிருர்கள். அடடா! ஒரு மனிதனுடைய பிராணனே அந்தரத்தில் தொங்கும்போது அல்ப விளம்பரத்தைப் பெரிய அதிசய விஷயமாகப் பார்க்கிருர்கள்" என்ருர்.

தேவராஜின் தாயார் "அய்யோ மகனே! நீ இத்தகைய ஆபத்தில் சிக்கிக்கொள்ளவேண்டுமா? இது எனக்கு அதிசயத்திலும் பெரிய அதிசயமாக விருக்கிறது" என்ருள்.

வைத்தியர் அம்மாதை நோக்கி "ஏனம்மா! அப்பிரபு இராஜாங்க விஷயத்தில் கடுமையான அபிப்பிராயமுடையவரோ?" என்ருர்.

அம்மாது "அய்யோ இல்லையே! அதுதானே எனக்குப் பின்னும் அதிசயத்தை விளைவிக்கிறது. அவன் இப்போது முழுமையும் வேருன ஒரு முக்கிய விஷயத்திற்காக இந்திரபுரிக்கு வந்திருக்கவேண்டியவன். கடவுளே! அவன்மேல் கருணைகாட்டும்" என்று பிரார்த்தித்தாள்.

அச்சமயம் சாளரத்தருகிலிருந்த வைத்தியர் "ஆ! மண்டபத்தின் வாயிலிலிருக்கும் ஜனங்களுக்குள் நெகிழ்ச்சி யுண்டாகிறது; தீர்ப்புகூறிவிட் டிருக்கவேண்டும். ஆம் ஆம்" என்றார்.

தேவராஜின் தாயார் ஆசனத்தை விட்டெழுந்திருக்க முயன்றாள்; முடியவில்லை; பேசவும் முடியாமல் பரிதாப மான நிலைமை யடைந்தாள். அதைக்கண்ட சகோதரிகள் மிக்க இரக்கமுற்று "கடவுள் தங்கள் புத்திரரைக் காப்பாற் றப் பிரார்த்திக்கிறோம்" என்று கூறிவிட்டு வைத்தியரை நோக்கி "அய்யா! தயவுசெய்து சீக்கிரம் சென்று விசாரித் துக்கொண்டுவாரும்; இந்தம்மாளுடைய மனோவேதனை சகிக்கக்கூடாததாக விருக்கிறது" என்றார்கள்.

வைத்தியர் "விசாரிக்கவேண்டிய அவசியமேயில்லை. அவர் விடுதலை யடைந்தால் சீக்கிரத்தில் தமது சிநேகிதர் களோடு வெளியில் வருவார். அப்படிக்கின்றேல் காவலர் மத்தியில் வெளியில் அழைத்து வரப்படுவார்" என்றார். இம்மொழிகளை யவர் தேவராஜின் தாயாருக்குக் கேட்க லாகாதென்ற எண்ணத்தோடு மெதுவாகவே கூறினார். ஆயினும் அவள் செவியில் அவ்வார்த்தைகள் விழுந்தன. வைத்தியரும் அவர் பக்கத்தில் சகோதரிகளும் வேலைக்காரி யும் சாளரத்தருகில் நின்று கொண்டிருந்தார்கள்.

அச்சமயம் யாரோ மெதுவாக வைத்தியரின் தோளைத் தொடுவதுபோல் தோன்ற அவர் திரும்பிப் பார்த்துத் தேவ ராஜின் தாயாரும் அருகில்வந்து நிற்பதைக்கண்டு "அம்மா! தாங்கள் ஆசனத்தில்போய் அமர்ந்திருப்பது நலம்" என் றார். அம்மாது, "ஆயினும் பரவாயில்லை. நான் இங்கேயே நிற்கிறேன்" என்றாள். அச்சமயம் அவள் முகத்தில் தைரி யமும் துணிகரமும் தோன்றின.

சில நிமிடங்கள் ஒருவரும் ஒன்றும் பேசாமல் ஆவ

லோடு ஜனக்கூட்டத்தையும் நகரமண்டபத்தின் வாயிற் படியையும் நோக்கிக்கொண் டிருந்தார்கள். அச்சமயம் தேவராஜின் தாயாருடைய மனோநிலைமை எவ்வாறிருந்த தென்பதை யிதை வாசிக்கும் நண்பர்களே யூகித்துக் கொள்ளலாகும். திடீலென்று நகரமண்டபத்தின் வாயிலருகி லிருந்த ஜனங்கள் விலகத்தொடங்கினார்கள். டிறுநிமிடம் சிலபோர் வீரர்கள் வெளியில் வந்தார்கள். வேலைக்காரி "அய்யோ கடவுளே! அப்பிரபு அதோ அவர்கள் மத்தி யில் இருக்கிறார்" என்றாள். தேவராஜுப்பிரபு தண்டனை யடைந்தார் என்று வெளிப்படையாகத் தெரிந்துவிட்டது.

அவன் தாயார் வாயினின்றும் ஒரு வார்த்தைகூட வெளிவரவில்லை. அம்மாது தன் ஆசனத்தில் போய் உட் கார்த் திரும்பி அடியெடுத்து வைத்தாள். ஆனால் துப் பாக்கிக்குண்டு இருதயத்தில் பாய்ந்ததுபோல் தடா லென்று கீழே விழுந்து விட்டாள்.

இப்போது நாம் சுந்தராபாய் இராஜகுமாரியைப் பின் பற்றுவோம். அவள் தன் முகமூடியை மூடிக்கொண்டு நகரமண்டபத்தை விட்டுப்புறப்பட்டாள் என்று கூறினோ மல்லவா? அங்கு அவளுக்கு வந்த கடிதத்தை வாசித்துப் பார்த்ததும் அங்கிருந்து புறப்பட்டு, தான் தங்கியிருந்த ஹோட்டலுக்கு நோய்ச் சென்றாள். அவள் தன் அறைக் குள் நுழைந்ததும் வரதராஜு அங்கு தனக்காகக் காத்துக் கொண்டிருப்பதைக்கண்டாள்.

வரதராஜு சுந்தராபாயை நோக்கி, "நான் அனுப்பிய சீட்டு வந்து சேர்ந்ததா?" என்று ஆவலோடு கேட்டான்.

சுந்தராபாய்:—"ஆம். அதனாற்றான் நான் இப்போது வந் தேன். அங்கு நடக்கிற விவகாரங்கள் முழுமையும் விரோதமாகவே நடக்கின்றன. அப்படி நேர்வதாயின் நீ அவரைக் காப்பாற்ற வழி வைத்துக் கொண்டிருக்

கிறதாக உன்னுடைய கடிதத்தில் கூறியிருக்கிறாய்; ஐயோ! உன் யோசனையென்ன? கடவுளே! அதை வெளியிடு. அந்த நியாய சபை சம்பந்தப்பட்ட வரையில் அந்த வாலிபரின் ஆயுள் முடிந்த மாதிரியே" என்றாள்.

வரதராஜு:—"அப்படியாயின் அங்கு கொண்டுவந்து ஒட்டப்பட்ட பெரிய விளம்பரங்களில் எதையும் தாங்கள் காணவில்லைபோலும்" என்றான்.

சுந்தராபாய்:—"இல்லை. நான் அவற்றைக் கவனிக்கவேயில்லை. அவை யெப்படி இந்த விஷயத்தில் சம்பந்தப் படுகின்றன?" என்றாள்.

வரதராஜு:—"இதோ நமது ஹோட்டலுக் கெதிரிலேயே ஒரு விளம்பரம் ஒட்டப்பட்டிருக்கிறது. அதோ அந்தச் சாளரத்தில் நின்று பாருங்கள். அது நன்றாக எதிரில் தெரிகிறது" என்றான்.

சுந்தராபாய் உடனே அவன் காட்டிய சாளரத்தருகில் நின்று பார்த்தாள். முகத்திற்கு நேராக ஒரு விளம்பரம் ஒட்டப்பட்டிருந்தது. அது பெரிய எழுத்துக்களால் அச்சியற்றப்பட்டிருந்ததால் அவள் அதில் பிரசுரிக்கப் பட்டிருந்த கீழ்க்கண்ட சங்கதியை வாசித்தாள்:—

"சாரதாபுரி இராஜ்ஜியத்தின் அரசனாகிய காலஞ்சென்ற சுந்தரஸிங் மகாராஜன், இப்போது நமது நாட்டில் கலகம் விளைத்த கலகக்காரருக்கு இரகசியமாக உதவிசெய்வதாகவும், அவர்கள் கூட்டத்தில் இரகசியமாகச் சேர்ந்திருந்ததாகவும் நமது நாட்டிலும் வெளி நாடுகளிலும் ஒரு விதமான தப்புவதந்தி யுண்டாகி யிருந்தது. இப்போது சாரதாபுரியின் அரசராகவிருக்கும் அவர் புத்திரர் அது விஷயமாக மிக்க மனஸ்தாபப்படுகிறார். அவர் நமது அரசருக்கு உண்மையான நண்பரானதால் தமது தந்தையின்மேல் அத்த

கைய பொய்வதந்திகள் நிகழ்வது அவர்மனதிற்கு மிக்க வருத்தத்தை யளிக்கிறது ; ஆகையால் சுந்தாசிங் அரசர் இக்கலகக்காரரோடு சேர்ந்திருந்ததாக நிரூபிக்கத்தக்க கடிதங்கள் ஏதேனு மிருக்கும் பட்சத்தில் அக்கடிதங்களைக் கொண்டுவந்து கொடுப்பவர்களுக்கு நல்ல பரிசளிப்பதாகக் கூறுகிறுர். இவ்விஷயத்தில் அவருக்கு உதவிசெய்ய நமது அரசர் தீர்மானித் திருக்கிறுர். ஆதலின் அத்தகைய கடிதங்களைக் கொண்டுவந்து கொடுப்பவர்களுக்கு சாரதாபுரி யரசன் கொடுக்கும் பரிசன்னியில், அவர்கள் நமது நாட்டில் இராஜத்துரோகமான குற்றம் ஏதேனும் செய்திருந்தால் அது பூரணமாக மன்னிக்கப்படும் என்று நமது அரசர் விளம்பரம் செய்திருக்கிறுர்.”

சுந்தராபாய் அந்த விளம்பரத்தை வாசித்து முடிந்து வரதராஜை நோக்கித்திரும்பியதே அவன் இராஜகுமாரியை நோக்கி “பார்த்தீர்களா! சுந்தாசிங் அரசனுடைய குமாரன் தன் தந்தையைப் பற்றிய அவ்வதந்தியை அடியோடழிக்கப் பார்க்கிறுன். அதைப்பற்றிய கடிதங்கள் ஏதேனுமிருப்பின் அவை தன் தந்தையால் எழுதப்பட்டவையல்லவென்றும் பொய்க்கையொப்பம் வைக்கப்பட்டவை யென்றும் நிரூபித்து விடவும், அத்தகைய கடிதங்களையும் கைப்பற்றி, அதைப்பற்றிய சந்தேகமான ருசுக்கூட யில்லாதபடி, அவற்றையழித்துவிடத் தீர்மானித்திருக்கிறுன். நமது அரசன் அவ்விஷயத்தில் அவனுக்குப் பூரண உதவிசெய்யத் துணிந்திருக்கிறுன். அவற்றை யழித்துவிட்டால் அவன் தந்தையைப்பற்றிய சந்தேகமனைத்திற்கும் எள்ளளவேனும் அத்தாட்சி யில்லாமற் போகும் என்பதே அவன் ஆலோசனை” என்றுன்.

யாவும் கேட்ட சுந்தராபாய், “ஆம்; இப்போதுயாவும் நான் அறிந்துகொண்டேன். ஆனுல் அவற்றைப்பற்றி விவ

கரிக்க நமக்கு அவகாசமில்லை. இந்த வாலிபப்பிரபுவைக் காப்பாற்ற நமக்கு வழியகப்பட்டதற்காக நாம் கடவுளைத் தோத்திரிக்க வேண்டும்" என்றாள்.

வரதராஜு:—"நானும் அதையே கூறுகிறேன். அவன் நிரபராதியென்று தாங்கள் கூறியது முதல் என்மனம் நானே யவனைக் கொலை செய்தவன்போலப் பதைக்கிறது. எனக்கு எள்ளளவேனும் மனநிம்மதியே கிடையாது; அவனை மீட்டுவிட்டாலன்றி எனக்கு மனநிம்மதி கிடைக்காது" என்றான்.

சுந்தராபாய் இராஜகுமாரி "இப்போது அவரைக்காப்பாற்றும் புண்ணியம் நம்மிருவருக்கும் சேரும்; நம்மிருவரில் ஒருவர் உடனேசென்று அக்கடிதங்களைத் தேவராஜுப்பிரபுவிடம்கொடுத்துச் சங்கதியைக்கூறிவிடுவோம். அல்லதுநான் கடிதங்களைக்கொண்டுபோய் நேரே அந்த ஜெனரலிடம் கொடுத்து தேவராஜுப்பிரபுவை விடுதலை செய்துவிடுகிறேன்" என்றாள்.

வரதராஜு:—தாங்கள் சற்று நேரம் பொறுக்க வேண்டும். நான் இரகுபதியையும் சங்கரனையும் காணவேண்டும். அக்கடிதங்களனைத்தும் அவர்களிடத்திலிருக்கின்றன. அவர்கள் ஒரு வேலையாக வெளியிற் சென்றிருந்தார்கள். ஆனால் இதுகாறும் திரும்பிவந்து விட்டிருப்பார்களென்றே நம்புகிறேன்.

சுந்தராபாய்:—"அப்படியாயின் சீக்கிரம் போ. இந்த ஒரு நல்ல காரியத்தையாவது நான் செய்யட்டும். என் வாழ் நாட்களில் இதுகாறும் நல்லது ஒன்றையும் நான் செய்யவில்லை" என்றாள்.

அவள் பின்னால் கூறிய வாக்கியம் அவன் செவிகளில் விழவில்லை. அதற்குள் அவன் அறையிலிருந்து வெளிப்பட்டுக் கதவை மூடிக்கொண்டு போய்விட்டான்.

## 184-வது அத்தியாயம்.

### எவ்விதமாவது தேவராஜைக் காப்பாற்ற வரதராஜின் முயற்சி—பத்திரமும் இரும்புப் பெட்டியும்—பத்திரம் மறுக்கப்படல்—பந்தோபஸ்தான மறைவிடம்.

வரதராஜன் இரகுபதியும் சங்கரனும் இருக்கும் அறைக்குச் சென்றபோது அவர்கள் அங்கிருந்தார்கள். அச்சமயம் அவர்கள், தங்கள் முன்னிருந்த ஒரு இரும்புப் பெட்டியைச் சோதித்துக்கொண் டிருந்துவிட்டு அப்போதுதான் அதைமூடிப் பூட்டிக்கொண் டிருக்கிறார்கள். அவர்கள் எதிரிலுள்ள மேஜையின் மேல் வெடி மருந்து டப்பியொன்று இருந்தது.

வரதராஜன் "நண்பர்களே! நீங்கள் இருப்பதைக்காண நான் சந்தோஷமடைகிறேன். எனக்கு..." என்பதற்குள்,

இரகுபதி:—"சற்றிரு; நீ எங்களுக்குக் கூறக் கொண்டுவந்திருப்பதைவிட நாங்கள் உனக்கு விசேஷமான சமாசாரம் கூற விருக்கிறோம் என்று நினைக்கிறேன்" என்றான்.

வரதராஜன்:—"ஆ! அப்படியானால் விசேஷ சமாசாரங்களிருக்கின்றன. இந்த இரும்புப்பெட்டி என்ன? இதோ விருக்கும் வெடிமருந்துப்பெட்டி என்ன?" என்றான்.

இரகுபதி:—"இரு இரு; ஏககாலத்தில் பல கேள்விகள் கேட்காதே. முதலாவது இக்கலகமும் ஆபத்தும் ஒழிகிறவரையில் நாம் மறைந்திருக்க ஒரு இரகசியமான இடம் அகப்பட்டிருக்கிறது. அது நகரத்திலிருந்து சுமார் இரண்டுமைல் தூரத்திலுள்ள ஒரு பாழடைந்த மாளிகை. சங்கரா! அதன் பெயர் என்ன?" என்றான்.

சங்கரன்:—அதன்பெயர் தேவமாளிகை.

இரகுபதி:—ஆம் ஆம். அங்கு அதைச்சுற்றி ஏராளமான செடிகளும் புதர்களும் நெருங்கி நிறைந்திருக்கின்றன. நாம் அங்கு எவ்வளவு காலமாயினும் ஒளிந்திருக்கலாகும்.

வரதராஜு:—சரி; அப்படியாயின் நான் உங்கள் கூடவேவர ஆயத்தமாக விருக்கிறேன். நான் கூறும் விஷயம் கவனிக்கப்பட்டதே.

இரகுபதி:—நண்பனே! நீ எப்போதும் ஒரு காரியத்தைவிட்டு ஒரு காரியத்தை நிறைவேற்றவே எண்ணிக்கொண்டிருக்கிறாய். ஒரு நாளைக்கு இது உனக்கும் எங்களுக்கும் கேடாய் முடியும். முதலாவது நாம் சென்னூருக்கு வந்தது பைத்தியக்காரச்செயலே. நீ வரும்படி பல வந்தப் படுத்தினாய். இராஜகுமாரிக்கு, அவள் நேற்று தானே காட்டிக் கொடுத்துவிட்ட ஒருவனைக் காப்பாற்ற வேண்டும் என்பதே பேச்சாயிருக்கிறது. இவையாவும் வீண்காரியங்கள். நானும் சங்கரனும் தேவமாளிகைக்குப்போய் விடுவதென்று தீர்மானித்துக்கொண்டோம்.

வரதராஜு:—நீங்கள் புதுவிளம்பரத்தைப் பார்த்தீர்களா?

இரகுபதி:—நானும் சங்கரனும் சற்று முன்புதான் அதைப் படித்துப் பார்த்தோம். அவர்கள் இக்கடிதங்களைக் கைப்பற்றப் பார்க்கிறார்கள்; அவர்களால் முடியுமா?

வரதராஜு:—தேவராஜுப் பிரபுவைக் காட்டிக்கொடுத்தது பெருந்தவறென்று இராஜபுத்திரி கூறியதையும் மற்ற விஷயங்களையும் உங்களுக்கு நான் கூறியிருக்க நீங்கள் ஏன் வெளிச்சென்றீர்கள்?

இரகுபதி:—ஓ! நாங்கள் வெளியில் சென்றதற்கும் அதற்

கும் ஒரு சம்பந்தமுமில்லை. நாங்கள் இக்கடிதங்களை வைத்திருக்கப் பழைய தகரப்பெட்டியைவிட ஒரு புதுப்பெட்டி நலம் என்று கருதினோம்.

வரதராஜன்:—ஓ! இதுதான் புதுப்பெட்டியாக்கும்.

இரகுபதி:—ஆம் இதுதான். ஆனால் இதனிடத்திலுள்ள விசேஷங்கள் இன்னவையென்பது உனக்குக் கொஞ்சமும் தெரியாது. நான் கூறுகிறேன்.

வரதராஜன்:—எனக்குக் கூறவேண்டிய அவசிய மில்லை. ஆனால் இந்த வெடிமருந்துக்கும் இதற்கும் ஏதேனும் சம்பந்த மிருப்பதாயின்.......

இரகுபதி:—ஆம். பூரணசம்பந்த மிருக்கிறது. இதோபார் நண்பனே! இப்பெட்டியில் ஒரு இரகசிய அறையிருக்கிறது. இது ஒரு எந்திரம் போன்றது. நானும் சங்கரனும் அதில் இப்போது வெடிமருந்து போட்டுக் கெட்டித் திருக்கிறோம். இத்தகைய நேர்த்தியான பெட்டி நமக்குக்கிடைத்தது மிக்க அதிஷ்டம்—அதிலும் அதிகாரிகள் நம்மிடமிருக்கும் பத்திரங்களைக் கைப்பற்றக் கருதும் இச்சமயம். இதனால் அவர்கள் இக்கடிதங்களைக் கைப்பற்றும்படி விட்டுவிடாமல் இக்கடிதங்களையும் இவற்றை யெடுக்கவரும் ஆட்களையும் அழித்துப் போடுவோம்.

வரதராஜன்:—இப்பெட்டி யெப்படி அவ்வாறு செயயக் கூடும் என்பது எனக்குச் சற்றேனும் விளங்கவேயில்லை.

இரகுபதி அப்பெட்டியைப் பூட்டி அதை அப்புறம் வைத்துவிட்டுச் சாவியைச் சேபியில் வைத்துக்கொண்டு வரதராஜை நோக்கி, "இதோபார்; இப்போது பெட்டி பூட்டப்பட் டிருக்கிறது. சாவி இதோவிருக்கிறது. இதை யாரேனும் களவாடவந்தார்கள் அல்லது போலீஸார் இப்போது திடீலென்று உள்ளே நுழைந்து இதை யெடுத்துக்

கொள்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அவர்களுக்குச் சாவி அகப்படாது. நான் துரிதமாகச்சாவியை விழுங்கி விடுவேன். பெட்டி யதிகாரிகளிடம் கொண்டுபோகப்படும். அவர்கள் பெட்டியின் மேல்மூடியை உடைத்துத் திறக்க முயல்வார்கள். அவர்கள் அப்படியே செய்யட்டும். அவ்வளவுதான் முடிவு. இப்போது இதன் விவரம் உனக்கு நன்றாக விளங்கிவிட்டதல்லவா?" என்றான்.

வரத:—சுந்தரசிங் அரசனுடைய கடிதங்கள் அதிகாரிகளிடம் சிக்கலாகாதென்ற பிடிவாதமேன்? அவர்கள் பலவந்தமாக அவற்றை யெடுத்துச் செல்வதாயின் அவற்றை யழித்துவிட வேண்டுமென்ற வைராக்கியமேன்?

இரகு:—ஒருவன் தன்னிடமுள்ளதைக் கொடுத்துவிட விரும்பமாட்டான்.

வரத:—ஆயினும் நாம் விரும்பத்தக்க ஒருவருடைய பிராணனைக் காப்பாற்றவேண்டிவரின் இக்கடிதத்தை யதிகாரிகளிடம் கொடுத்து விடுவதென்று ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறோமல்லவா?

இரகு:—ஆம். அது உண்மையே. அதை நான் மறந்துவிடவில்லை.

வரத:—இப்போது ஒரு உயிர் ஆபத்திலிருக்கிறது. இரண்டு மணி நேரத்திற்கு முன்பு இராஜகுமாரி கூறிய விஷயங்களை நான் மறுபடி கூறவேண்டியது அவசியமல்ல. அந்த வாலிபப்பிரபு கொல்லப்படின் அக்கொலைப்பாதகம் எங்கள் தலைமேல்தான் ஏறும்.

இரகு:—உங்கள் வாலிபப்பிரபுவின்மேல் எங்களுக்கு விருப்பமில்லை.

வரத:—நான் கூறுவதை நம்புங்கள். நீங்கள் பெருந்தவறான அபிப்பிராயம் கொண்டிருக்கிறீர்கள்.

சங்க:—அவன் குடியரசென்று கூவினன்.

இரகு:—அவன் நமது நண்பனைக் கொன்றுவிட்டான்.

வரத:—அது கொலையாகாது. நான் கண்ணால் பார்த்தேன். அவன் இரண்டு மூன்று முறை நமது நண்பன் வெட்டு களைத் தடுத்துக்கொண் டிருந்தான். கடைசியில் அவன் தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள எதிரியைக் கொல்லவேண்டியது அவசியமாயிற்று. ஓ அது சுத்த வீரத்தன்மையே?

இரகு:—சரி! இப்போது நமது சபையின் ஏற்பாட்டின்படி சந்தேகம் உண்டானால் நமக்குள் அதிகம்பேரின் அபிப்பிராயம் எப்படியோ அப்படி நடக்கவேண்டும். இங்கிருக்கும் நம் மூன்றுபேரில் இரண்டு பேருக்கு இப்பத்திரங்களை இப்போது கைவிட்டு விடாமல் இதைவிட மேலான காரணத்தைக் காட்டக்கூடிய சம் பவம் ஏற்படும்போது கைவிடலாம் என்ற அபிப்பிராய மாக விருக்கிறது. ஆகையால் அதன்படி நாம் ஒப்புக் கொள்ள வேண்டியதே.

சங்க:—இப்போது இச்சங்கதி ஒரு முடிவிற்கு வந்துவிட்ட படியால் நீயும் நமது கூட்டத்தின் கொள்கைப்படி இத் தீர்மானத்திற்கு உடன் படுவாய் என்றே நம்புகிறேன். நாங்கள் இருவரும் இப்போது தேவமாளிகைக்குச் செல்லப்போகிறோம்.

வரதராஜு இம்மொழிகளைக் கேட்டதும் பேரிடி விழுந்தவன்போ லாய்விட்டான். இவன் இதற்கு மாறுகூற முடியவில்லை. ஏனெனில் அவர்கள் கூட்டத்தின் விதிகள் அம்மாதிரியிருக்கின்றன. அதோடு அவன் இன்னமும் தேவ ராஜுப்பிரபுவிற்குப் பரிந்து பேசுவது தகுதியல்ல. ஆகை யால் அவர்கள் ஏற்பாட்டிற்கு ஒப்புக்கொண்டதோடு தன்

மனச்சோர்வையும் மனவருத்தத்தையும் சாமார்த்தியத்தோடு அடக்கிக்கொண்டான்.

இரகு:—"நீ எங்கள் கூடவே வருகிருயோ அல்லது பிறகு வர உத்தேசிக்கிருயோ? உன் அபிப்பிராயம் என்ன கூறு?" என்றான்.

வரதராஜன் "நான் சீக்கிரத்தில் உங்களிடம் வந்து சேருகிறேன். இச்சமயம் நான் இங்கிருந்து அந்த விசாரணையின் முடிவை யறிந்து கொள்ளவேண்டும்" என்றான்.

இரகுபதி:—அது சரிதான். சங்கரா! நாம் உடனே புறப்பட ஆயத்தப்படுவோம்.

வரதராஜன் உடனே அங்கிருந்து புறப்பட்டு இராஜகுமாரி யிருக்கும் அறைக்குச் சென்றான். அவன் முகக்குறியால் அவன் ஜெயத்தோடு வரவில்லை யென்றுணர்ந்த இராஜகுமாரி "என்? அவர்கள் இன்னும் திரும்பி வந்து சேரவில்லையோ?" என்றாள்.

வரதராஜன்:—எப்படியாயினும் அவர்கள் தேவராஜனைப் பிரபுவைக் காப்பாற்றப் பிரியப்படவில்லை.

சுந்தராபாய் கோபத்தோடு:—சே; சே இது சுத்த அநீதம்; பெரிய அக்கிரமம். நான் சென்று அவர்களைக் கேட்கிறேன்.

வரத:—இரகுபதியிடம் தாங்கள் கேட்பதால் ஒரு பிரயோசனமுமில்லை. இரகுபதியைப்பற்றித் தங்களுக்கு நன்றாய்த் தெரியுமல்லவா? அவன் ஒரு எண்ணங்கொண்டால் அதில் பிடிவாதம் சாதிக்கும் குணமுடையவன். அந்தச்சங்கரன் இரகுபதியின் வார்த்தைப்படி உறுதியாக நடக்கிறான். இப்போது அவர்கள் தீர்மானம்எத்தகையதெனத் தாங்கள் தெரிந்து கொள்ளலாம்." என்றான்.

சுந்தராபாய் மனச்சோர்வடைந்து ஆசனத்தில் சாய்ந்து மிக்க துயரத்தோடு சிந்திக்கலானுள். வரதராஜனும் மன வருத்தத்தோடு சிந்திக்கலானுன். கடைசியில் சுந்தராபாய் "நாம் இப்போது அவ்வாலிபப்பிரபுவை மீட்காவிடின் இரு வரும் கொலையாளிகளே யாவோம் என்பதிற் சந்தேகமே யில்லை" என்ருள்.

வரதராஜனுக்குக் கோபம் வந்து விட்டது. ஏனெனில் அவன் நெறிதவறி நடப்பவனல்ல. இராஜகுமாரி பொருமை கொண்டு கூறிய வார்த்தைகளை நம்பி அவன் தேவராஜைக் காட்டிக்கொடுக்கத் தொடங்கினுன். ஆகையால் இராஜ குமாரி கூறியதைக் கேட்டு மனக் கொதிப்படைந்து "சண் டாள ஸ்திரீயே! உன்னுலல்லவோ நான் இப்பெரும் பாத கத்தில் சிக்கிக்கொண்டேன். அய்யோ! என் உயிர் துடிக் கிறதே. அந்த வாலிபனுடைய ஒரு உரோமத்திற்கேனும் கெடுதி நேர விடுவதை விட அவன் பிராணனுக்குப் பதில் என் பிராணனைக் கொடுத்து விடுவேன். கெட்டித்த துப்பாக் கிகளோடு என்னைச் சுட ஆயத்தமாகவிருக்கும் ஒரு பட் டாள போர்வீரர்களின் முன்போய் நிற்க அஞ்சமாட்டேன்" என்ருன்.

சுந்தராபாய்:—"அய்யோ கடவுளே! என்னைத் தூஷிக் காதே. நான் இது வரையிலேயே எவ்வளவோ சகிக் கொணுத மனப்புண்ணடைந்திருக்கிறேன். இப்போ தென்ன செய்வது? உன்கடிதத்தைக் கண்டபோது நான், நீ இதை யனுகூலமாக முடிக்கச் சக்தியுடைய வனுக விருக்கின்ருயென்று நம்பினேன். நான் அக்கடி தத்தைக் கண்டதே துரிதமாய் விசாரணை மண்டபத் தைவிட்டு அப்பிரபுவின் செவியில் இரகசியமாய் "நம் பிக்கைக்கு இடமிருக்கிறது" என்று கூறிவிட்டேன். அந்தோ! அத்தகைய நம்பகமான மொழி பொய்

ப்பட்டு விட்டால் அவன் என்னென்று நினைப்பான். அய்யோ! நான் வேணுமென்றே இவ்வாறு மிக்க குரூரமாக நடந்து கொண்டதாக வல்லவோ கருது வான். அய்யோ! நான் மகா கொடியவிரோதியென் றும், நான் நியாயாதிபதிமுன் அவன் பக்கமாகப்பேச முயன்றதும் வீண் அபிநயம் என்றும், நம்பவைத்துக் கழுத்தறுக்கவே யப்படிச்செய்தேனென்றுமல்லவோ கருதுவான்" என்று பரிதபித்தாள்.

அவள் மொழிகளைக்கேட்ட வரதராஜூம் மனங் கரைந்து "அந்தோ! என்ன செய்வதென்று எனக்கு ஒன் றும் தோன்றவில்லையே. கடவுள்—இன்னும் எல்லா மகான் கள்—சாட்சியாகவும் கூறுகிறேன். நான் அவ்வாலிபனைக் காப்பாற்ற முயலாமல் விடமாட்டேன். நான் சென்று அத்தண்டனை யெப்போது நிறைவேற்றப்படும் என்பதை யறிந்து வருகிறேன்" என்றான்.

சுந்த:—"அதைப்பற்றி நான் தெரிந்து கொண்டேன். அத் தண்டனை நாளைக்காலையில் தான் நிறைவேற்றப்படும். அதைப்பற்றி ஐயமில்லை" என்றாள்.

வரத:—"சற்று உற்சாக மடைந்தவனாக ஆ! அனேக நாழி கைகள் இருக்கின்றன. நான் போய் அவனை அடை த்து வைத்திருக்கும் இடத்திலுள்ள காவலர்களில் யாரேனும் இரகசியமாக நமது கூட்டத்தைச் சேர்ந்த வர்களிருக்கிறார்களாவென்று பார்க்கிறேன். என்னா லான தந்திர சாமார்த்தியங்களைத்தும் ஒன்று விடா மல் செய்து பார்த்தே தீருவேன் என்பதுமட்டும் சத்தியம்" என்றான்.

இவ்வாறு சொல்லி விட்டு வரதராஜூ உடனே புறப் பட்டு வெளிச்சென்றான். சுந்தராபாய் இராஜகுமாரி தன் சிந்தனையோடு தனியாய் அறையில் உட்கார்ந்திருந்தாள்.

சுமார் ஒருமணி நேரம் கழிந்தது. அச்சமயம் கதவுதிறக்கப் பட்டதும் மீனுட்சிச் சீமாட்டியுள்ளே வந்தாள்.

---

## 185-வது அத்தியாயம்.

### சுந்தராபாயும் மீனுட்சியும்—வரதராஜின் கடைசியான தீர்மானம்—பொறுமையால் வரும் தீங்குகளுக்கு பின்னுல் ஏற்பட்ட மனவேதனை.

தன் தங்கையைக் கண்டதே சுந்தராபாய் மிக்க வியப் பும் மனக்கலக்கமுமடைந்து "ஓ! மீனுட்சி! நீ என்னை யடியோடு வெறுத்து விடவில்லையே? இன்னமும் கொஞ்சம் அன்பு வைத்திருக்கிருயல்லவா?" என்ருள்.

மீனுட்சி:—"ஓ! நான், நீ என் தமக்கை என்பதை எப்படி மறப்பேன்—" என்று அவளை யாலிங்கனம் செய்து கொண்டு, "அக்கா! கண்ணீர் விட்டுக்கதறியழு! ஆம் அழு! நீ செய்தது பெரும்பாதகச் செயல்" என்ருள்.

சுந்தராபாய் "தங்கையே! நான் அதை யுணர்கிறேன். கடவுளறிய அதற்காக மிக்க மனவருத்தமடைகிறேன். அதற்காக நான்படும் வேதனை கடவுளே யறிவார்" என் ருள்.

மீனு:—"ஆம் ஆம். எனக்குத் தெரியும். இன்றேல் நீ விசா ரணை நடந்த விடத்திற்கு வந்து அவரைக் காப்பாற்ற அவ்வளவு முயற்சி எடுத்துக் கொண்டிருக்க மாட் டாய். அந்த உண்மையில் எனக்கு நம்பிக்கை யிரா விட்டால் என்னை யிப்போது இங்கு நீ காணமாட் டாய். இருக்கட்டும், நீ அங்கிருந்து வெளிப்பட்ட போது அப்பிரபுவின் செவியில் என்னமோ இரகசிய மாகக் கூறினையே அதென்ன? ஏதேனும் நம்பிக் கைக்கு வழியிருக்கிறதோ?" என்ருள்.

சுந்த:—"அந்தோ! நம்பிக்கையான மொழிகளே நான் அவர் செவியிற் கூறினேன். அப்போது நம்ப வழி யிருந்தது. கடவுளே! இப்போது அது வீணாய்ப் போய் விட்டதே" என்றாள்.

மீனா:—"அந்தோ! அப்படி அது பயனற்றதாகப் போய் விட்டால் அவர் மனதிற்கு எவ்வளவு வேதனை! அவர் தாயார் மனம் எப்படித் தத்தளிக்கும்?" என்றாள்.

சுந்த:—அவர் தாயாரா?

மீனா:—ஆம். அந்தம்மாள் தன் புத்திரனைத் தன் பிராண னிலுமதிகமாகக் கருதுகிறாள். அவள் தன் புத்திரன் வேண்டுமென்று இதில் சம்பந்தப்பட்டிருக்க மாட்டா னென்றே நம்புகிறாள். நான் யாவும் கூறிவிட்டேன்.

சுந்த—என்ன? நீ அந்தம்மாளைப் பார்த்தாயா?

மீனா:—"ஆம்; பார்த்தேன். நான் மூர்ச்சையாய் விட்டபடி யால் மண்டபத்திற்கெதிரிலுள்ள ஜெனாவின் வீட்டிற் குக் கொண்டு போகப்பட்டேன். அந்தம்மாளும் அதே ஸ்திதியில் அங்கு கொண்டு வரப்பட்டார்கள். எனக்கு முன்னே மூர்ச்சை நீங்கிவிட்டது. அந்தம் மாள் தன் புத்திரன் மரண தண்டனை யடைந்ததை யறிந்ததே அவர்கள் பட்ட வேதனை சொல்லத்தா மானதல்ல. நீ யதைப்பார்த்திருந்தால் அதுவே நீ செய்த குற்றத்திற்குப் போதிய தண்டனையாகும்" என்றாள்.

சுந்த:—தங்கையே! இப்போது அந்த வாலிபரைக் காப் பாற்ற நான் எத்தகைய காரியம் செய்யவும் சித்தமாக விருக்கிறேன். ஓ கடவுளே! அவர் காப்பாற்றப்படா மற்போனால் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும்.

மீனா:—இப்போது பேசுவதில் என்னபயன்? அதற்காக ஏதேனும் வழியிருக்கிறதாவென்று பார்க்கவேண்டும்.

சுந்த:—ஜெனரலின் பாதங்களில் விழுந்து.—

மீனு:—பயனில்லை. அவருடைய இரண்டு புத்திரிகள் மகா உத்தமிகள். அவர்களாலானவரையில் தங்கள் தந்தையைக் கேட்டார்கள். அவர் தன்னால் முடியா தென்று கூறிவிட்டார். ஜெனரல் அப்பிரபுவின் தாயார் வந்திருப்பதை யறிந்து அந்தம்மாள் தன் புத்திரனைக் காண அனுமதியளித்தார்.

சுந்தராபாய் அதன்பின் வரதராஜு, இரகுபதியையும் சங்கரனையும் கண்டு பேசியதும் அவர்கள் பத்திரங்களைக் கொடுக்க மறுத்து விட்டதும் ஆகிய யாவும் கூறி "வாத ராஜு கடைசிவரையில் தன்னாலானதைச் செய்யத் துணிந் திருக்கிறான். இனி நீ என்னைத் தனியேவிட்டு, அப்பிரபு வின் தாயாரிடம்சென்று தேறுதல் கூறிக்கொண்டிரு" என் றாள்.

மீனாட்சிசென்ற இரண்டொரு நிமிடங்களில் வரத ராஜு வந்து அனுகூலமான சங்கதியொன்றும் கிடைக்க வில்லையென்று மனச்சோர்வோடு கூறினான். அவன் முகக் குறியைக்கண்ட இராஜகுமாரி "வரதராஜு! உன் மனதில் என்னமோ ஒரு யோசனை யிருக்கிறது. அதைக்கூறத்தடு மாற்றமடைகிறாய்" என்று சொன்னாள்.

வரத:—ஆம் ஆம். ஒரு பிசாசு என்மனதைப் பற்றப்போராடு கிறது. அதைப்பற்றிக் கேட்கவேண்டாம். அதை ஒரு உருவத்தோடு வெளிக்கிளம்ப விட்டேனோ நான் அழிந்தேன்.

சுந்த:—வரதராஜு! அந்த வாலிபரைக் காப்பாற்ற ஏதேனு மொருவழியிருந்தால் தயைசெய்து அதை வெளியிடு.

வரத:—நான் அவர் விஷயத்தில் முன்னமே யொரு குற்றம் செய்துவிட் டிருக்கிறேன். அச்சமயம் நான் என் கட மையைச் செய்வதாகவே கருதினாலும் அது குற்றமே.

அதனுலுண்டான கெடுதியை யொழிக்கப் பெரும் பாலும் இப்போது வேருெரு குற்றத்தைச் செய்ய வேண்டி நேரிடும் போலிருக்கிறது.

சுந்த:—ஆ! அந்த இரண்டாவது குற்றத்தைச் செய்தே தீர வேண்டும். நான் என் தங்கையைக் கண்டேன். இங்கு வந்திருந்தாள். தேவராஜுப்பிரபுவின் தாயார் வந் திருப்பதாகக் கூறினுள்.

வரத:—நான் அதைப்பற்றிக் கேள்விப்பட்டேன். என் மனவேதனை சகிக்கக்கூடியதாயில்லை. என் மனதில் இப்போதிருக்கும் எண்ணம் பெரிய துரோகம் செய் யும்படி என்னைத் தூண்டுகிறது. அதனுல் இரத்தக் களரி நேர்ந்தாலும் நேரிடும். அய்யோ கடவுளே!

சுந்த:—என்னதான் உன் மனதிலிருப்பது? அது எதுவாயி னும் சரி. நீயதை இன்னமும் ஆலசியம் செய்யாமல் விவரித்துக்கூறி விடவேண்டும். இந்த மர்மத்தையும் சந்தேகத்தையும் சகித்துக் கொண்டிருப்பது பெரிய நரகவேதனையாக விருக்கிறது.

வரத:—அப்படி நான் ஒரு குற்றம்செய்ய வேண்டியதாயின் தாங்கள் எனக்கு உடந்தையாக விருக்கவேண்டும். அவசியத்திற்காக அப்படிச் செய்யாவிட்டாலும் தாங் கள் அப்பிரபுவிற்குச் செய்த தண்டனைக்காகத் தாங் கள் அவ்வாறு செய்யவேண்டும். தங்களால் நானும் ஒரு குற்றம் செய்யவேண்டியதா யிருக்கிறது.

சுந்த:—அந்தோ! தயவுசெய்து என்மனதில் அம்புபாய்ச் சும் வார்த்தைகளைக் கூறவேண்டாம். நான் செய்த குற்றத்திற்குத் தண்டனை நான் இப்போதே யனுப விக்கிறேன். இப்போது அவ்வாலிபப் பிரபுவைக் காப் பாற்றுவதற்காக நான் இடுப்பளவு இரத்தத்தில் நீந்துவதாயினும் ஆயத்தமாக விருக்கிறேன்.

வரத:—இது எப்படிமுடியுமோ எனக்குத்தெரியாது. இரத்தம் சிந்தவேண்டிய சம்பவம் நேர்ந்தாலும் நேரிடும். நான் கூறுவது தங்களுக்கு விளங்கவில்லையா? இரகுபதியும் சங்கரனும் அப்பத்திரங்களை யெடுத்துக்கொண்டு இராஜமாளிகைக்குச் சென்றிருக்கிறார்கள்.

சுந்தராபாய் அவனுடைய யோசனையை யறிந்துகொண்டு "ஓ! அப்படியாயின் அவர்களைக் காட்டிக்கொடுக்கும் வேலையை நான் செய்யவேண்டுமென்கிறாய்; நேராகப் போர்வீரரை யழைத்துப்போய் அவர்களைப் பிடித்துக்கொடுத்துவிட்டால் பத்திரங்களும் சிக்கிக்கொள்கின்றன; அதுதான் நான் செய்ய வேண்டியதாயின் அப்படியே செய்கிறேன்.

வரத:—"அதல்ல என்யோசனை; அப்பத்திரங்களைப்பற்றியவர்கள் விசேஷஜாக்கிரதை யெடுத்துக்கொண்டிருக்கிறார்கள்" என்று இரகுபதி காட்டிய பெட்டியைப் பற்றிய சங்கதியை விவரமாகக்கூறி, "பார்த்தீரா! தங்கள் யோசனைப்படி செய்தால் அக்கடிதங்கள் அழிவதோடு ஆட்களும் அழியநேரிடும். கடைசியில் நமதுகாரியம் நிறைவேறாமற்போம்.

சுந்த:—அப்படியாயின் நீ வேறு என்ன ஆலோசனை கூறுகிறாய்?

வரதராஜு சற்றுசிந்தித்து:—சரி, செய்தே தீரவேண்டும். நான் அவர்களைக் கேட்டதற்கு அவர்கள் சற்றேனும் நீதியாவது இரக்கமாவது இல்லாமல் ஒரே பிடிவாதமாக இவ்விஷயத்தில் உதவிசெய்ய மறுத்துவிட்டார்கள். இப்போது நாம் நிரபராதியாகிய ஒரு உத்தமன் உயிரைக் கவனிப்பதா, நியாயமாவது இரக்கமாவது சற்றுமில்லாத இந்த அறிவில்லாத் துஷ்டர்களின் உயிர்களைக் கவனிப்பதா? எது கடவுளுக்குப் பிரீதி?

சுந்த:—நீதியையும் கருணையையும் நிரபராதியையுமே கவனிக்க வேண்டும்.

வரத:—சரி. நான் அவ்வாறே தீர்மானித்து விட்டேன். தீபம் வைத்து இருள் சூழ்ந்த உடனே தாங்கள் என்கூடப் புறப்பட ஆயத்தமாக விருக்கவேண்டும். ஒரு சமயம் நமது கரங்கள் அந்தத் துஷ்டரின் இரத்தத்தில் தோய வேண்டியிருக்கும். நாம் உடனே இதைவிட்டுத் தப்பித்துக்கொண்டு போய்விடவேண்டி நேரிடும். ஆகையால் தாங்கள் முன்னடிச் செய்யவேண்டிய ஏற்பாடுகளேதேனு மிருந்தால் அவற்றைச் செய்துவிடுங்கள். நான் இருட்டானதே வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றான்.

அவன் சென்றதே சுந்தராபாய் "ஓ கடவுளே! அப்பிரபு எப்படியும் காப்பாற்றப்படுவார்" என்று சந்தோஷத்தோடு கூறிக்கொண்டாள். கால்மணி நேரங்கழித்துச் சுந்தராபாய் பூரணமாக முகமூடியை யணிந்துகொண்டு ஹோட்டலிலிருந்து புறப்பட்டு நகர வோரத்தில் பெண் சந்நியாசிகள் இருக்கும் ஒரு பிரசித்திபெற்ற மடத்திற்குச் சென்றாள்.

சுந்தராபாய் அங்கு சென்று மடத்துக்கதவைத் தட்டியதும், ஒரு பெண் சந்நியாசி வந்து கதவைத் திறந்து "யார்? என்ன காரியமாக வந்தாய்?" என்றாள்.

சுந்தராபாய் "அம்மா! நான் இம்மடத்தலைவியாகிய குருமாதைக் காணவேண்டும்" என்றாள். அம்மாது ஆடவர் யாரேனும் ஸ்திரீவேடமணிந்து உள்ளே பிரவேசிக்கப் போகிறார்களென்ற எண்ணத்தால் சுந்தராபாயை முகமூடியையெடுக்கச் சொல்லிப் பார்த்துத் திருப்தியடைந்த பிறகே யுள்ளே யழைத்துப்போய் ஒரு இடத்தில் இருக்கச் செய்து தான் சென்று மடாதிபதியின் அனுமதிபெற்றுப் பிறகு அவளை யழைத்துப்போய் மடாதிபதியின் முன் விட்டாள்.

சுந்தராபாய் மடாதிபதியாகிய அச் சந்நியாசிமாதுக்குத் தக்கபடி வந்தனமளித்து, தான் உலக விவகாரத்தில் வெறுப்படைந்து விட்டதால் இனி நிம்மதியாகக் கடவுள் சிந்தனையில் காலங்கழிப்பதாகவும், தான் உலகில் இராஜ குமாரி யந்தஸ்துடையவ ளென்றும், திரண்ட ஆஸ்தியுடையவளென்றும், தன் செல்வமனைத்தும் மடம் முதலிய தரும கைங்கரியங்களுக்கு வைத்துவிட்டுத் தான் மடத்திலேயே நிம்மதியாகக் கடவுள் சேவையில் காலங் கழித்துவிடத் தீர் மானித்திருப்பதாகவும் கூறினாள்.

மடாதிபதி சுந்தராபாயை யுற்று நோக்கியபோதே இவள் உயர்ந்த அந்தஸ்திலிருந்தவள் என்று உணர்ந்து கொண்டாள். பிறகு இவள் கூறியதால், தான் கருதியயது உண்மையென்று அறிந்து, "ஆ புத்திரியே! உலகத்தின் துன்பங்களையும் அலைச்சல் கவலைகளையும் விட்டு நிம்மதியாயிருக்க மனம் திரும்பிய உனக்கு நான் இங்கு அடைக்கலம் தருகிறேன். நீ பாவத்திற்கஞ்சி வந்தனையோ, துயரத்திற் கஞ்சிவந்தனையோ?" என்று வினவினாள்.

சுந்த:—தாயே! நான் பாபத்தாலுண்டான சகிக்கொணாத துயரால் இவ்வாறு துணிந்தேன். உலகில் நான் என்ன அந்தஸ்தில் என்ன பெயரோடு இருந்தேனென்பது இங்குள்ள சகோதரிகளுக்குத் தெரியாதிருக்கும் படி அருள் புரியவேண்டும்; எனக்குத் தாங்கள் வேறு பெயரிடவேண்டும். அப்பெயர் நான் துக்கத்தை யனுபவிக்க வேண்டியவள் என்பதை யெனக்கு நினைப் பூட்டவேண்டும்.

மடாதிபதி:—உன் மெய்யான பெயர் எனக்கும் பாப மன்னிப்பளிக்கும் தந்தையாகிய குருவுக்கும் மட்டுமே தெரியும். இங்குள்ள வேறு யாருக்கும் அறிவிக்கப்

படமாட்டாது. உனக்குத் துக்காபாய் என்று பெயரிடுகிறேன். நீ எப்போது இங்கு வருகிருய்?

சுந்த:—தாயே! நான் செய்வேண்டிய கடமைகள் உலகில் இன்னும் இரண்டொன்றிருக்கின்றன. நான் உடனே சென்று அவற்றைச் செய்துவிட்டுச் சில நாழிகைகளுக்குள் திரும்பிவந்து தங்கள் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்கிறேன்.

மடாதி:—ஆம் ஆம். கடமைகளைச் செய்யத் தவறலாகாது. உன் கடமைகளை யெல்லாம் செய்துவிட்டு ஆலசியம் செய்யாமல் வந்து விடு. நான் இப்போதே யுனக்கு என் ஆசிர்வாதத்தை யளிக்கிறேன்.

சுந்த:—வேண்டாம் வேண்டாம். இப்போதே தங்கள் ஆசிர்வாதத்தைப் பெற்றுக்கொண்டு மறுபடிபாபமும் துன்பமும் மலிந்த கர்ம உலகத்தில் பிரவேசிப்பதாயின் பரிசுத்தமான யாவற்றையும் இழந்து விட்டதாக என் மனம் வேதனையடையும். ஆகையால் தாயாரே! நான் சென்று என் கடமைகளை முடித்து விட்டுத் திரும்பி வந்தபின் எனக்குப்பூரண ஆசிர்வாத மளிக்கப் பிரார்த்திக்கிறேன்.

மடாதிபதி "குழந்தாய்! தடையின்றி யுனக்கு ஆசிர்வாதம் அளிக்க ஆயத்தமாக விருக்கிறேன்" என்று கூறிய பின், சுந்தராபாய் அம்மாதுக்கு நமஸ்காரம் செய்து விடைபெற்றுக்கொண்டு மடத்தைவிட்டுப் புறப்பட்டாள். அங்கிருந்து ஹோட்டலுக்குத் திரும்பும்போது வழியில் ஒரு தோட்டத்தில் மெதுவாக உலவிக்கொண்டு சிந்தித்துக் கொண்டு சென்றாள்.

சுந்தராபாய் தன் தங்கைமேல் கொண்ட பொறாமையால் முதலில் தேவராஜையும் மீனாட்சிச் சிமாட்டியையும் காட்டிக் கொடுத்துவிட்டாள். ஆயினும் பின்னால் தேவ

ராஜு மீனுட்சியின்மேல் காதல் கொண்டிருக்கவில்லை யென் பதையும், அவன் வேறொரு மாதை மணம் புரியவேண்டு மென்று முன்னமே தீர்மானம் செய்திருக்கிறு னென்பதை யும் உணர்ந்ததே தான் செய்தது அக்கிரமமென்று அவள் மனதிற்குப் புலப்பட்டுவிட்டது. ஆனுல் ஒரு அம்பை வில்வி னின்று விடும்போதே 'நாம் எய்யக் குறிபார்ப்பது என்ன ஜெந்து' என்று ஒருவன் நிச்சயமாக அறிந்து கொள்ள வேண்டும். அப்படிச் செய்யாமல் அவசரப்பட்டு மிருக மென வெண்ணி மனிதன் மேல் அம்பை யெய்து விட் டால் அதை மறுபடி திரும்பிவரச் செய்ய முடியுமோ? பொறுமையால் ஆத்திரப்பட்டு உண்மையையறிய முயற்சி செய்யாமலே சுந்தராபாய் தேவராஜுக்கு அத்தகைய கொடியதீங்கு செய்து விட்டாள்.

இப்போது அதை யெவ்விதத்திலேனும் தீர்த்துவிட அவள் துணிந்திருக்கிறுள். வரதராஜு கூறியமாதிரியால் இரகுபதி சங்கரன் இருவரையும் நாம் கொல்லவேண்டி நேர்ந்தாலும் நேருமென்று அவள் மனதிற்கு நன்ருகப் புலப்பட்டுவிட்டது. தான் முதல் செய்த பாபத்தினுல் நேரிடும் கெடுதியைத் தடுப்பதற்காக மறுபடி இன்னெரு பாதகத்தைச் செய்யத்துணிந்து விட்டாள்.

அப்படி வரதராஜு எதிர் பார்க்கிறபடி கொலை செய்ய நேர்ந்தால் பிறகு அவனும் சுந்தராபாயும் அங்கிருக்க முடி யாது. கொலை யெப்படியும் வெளிப்பட்டுவிடும். இவர்களைப் பிடித்து விடுவார்கள். ஆதலின் இருவரும் உடனே அந்த நாட்டை விட்டோடி விடவேண்டும். சுந்தராபாய்க்குத்தான் செய்த பாதகச் செயல்கள் அவள் மனதிற்கு இனி நிம்மதி யில்லாமற் செய்துவிட்டபடியால்தான் சந்நியாசி மடத்திற் சேர்ந்து தன் வாழ்நாளைக் கழித்தாலே அப்பாதகங்கள் ஒழி யுமெனத் தோன்றியதால் இவ்வாறு ஏற்பாடு செய்தாள்.

நண்பர்களே! அந்தோ! பொறுமையினுலுண்டான தீங்குகளைக் கவனியுங்கள். பொறுமையால் கோபமும் கோபத்தால் கொலைகளும் நேர்வது சுபாவம். இதனுலன்றே பொறுமைக்குணத்தை யான்றோர் இகழ்ந்து கூறி அதற்கு நாம் இடந்தாலாகாதென்று அறிவுறுத்துகின்றனர். பொறுமை கொடிது கொடிது! மகா கொடிது. பொறுமையை யுடையோர் முடிவில் பெருந்தீங்குகளுக் காளாவார்களென்பதற்கு நமது சுந்தராபாய் இராஜகுமாரியையே நல்ல திருஷ்டாந்தமாகக் கருதலாகும்.

சுந்தராபாய் ஹோட்டல் போய்ச் சேர்ந்ததும் தன் அறையில் உட்கார்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தாள். இரண்டொரு நிமிடங்களுக்குள் மீனுட்சிச் சீமாட்டி யங்கு வந்தாள். தன் தங்கையைக் கண்டதே சுந்தராபாய் மிக்க ஆவலோடு, "தங்கையே! என்ன சமாச்சாரம்?" என்றாள்.

மீனு:—"அக்கா! எனக்கு ஒரு சமாசாரமும் கிடைக்கவில்லை. சிறைச்சாலைக்குள் சென்று அப்பிரபுவைக்காண எனக்கு அனுமதி கிடைக்கவில்லை. பிரபுவின் தாயார் ஒருவினுடி கூடத் தனது புத்திரனை விட்டுப் பிரிந்திருக்க மனமின்றி அவர் கூடவே யிருக்கிறுர்கள்" என்றாள்.

சுந்தராபாய் சற்றுநேரம் சிந்தித்துப் பிறகு தன் தங்கையை நோக்கி "இப்போது நம்பிக்கை யிருக்கிறதென்று கூற எனக்கு விருப்பமில்லை. ஏனெனில் முன்னமே யொரு முறை யவரிடமே இவ்வாறுகூறித் தவறிப்போய்விட்டது" என்றாள்.

மீனு:—ஆ! அப்படியாயின் நம்பிக்கை யிருக்கிறது. நீகூறும் வார்த்தைகளால் அவ்வாறு விளங்குகிறது. ஆனல்...

சுந்த:—இப்போது என்னை யொன்றும் கேட்காதே; ஆனல் ஒன்றுமட்டும் நம்பு. எல்லாமுயற்சியும் செய்யப்படும்.

மீனு:—"ஆ! அக்கா! நீயவரைக் காப்பாற்றி விடுவாய்; ஆம். காப்பாற்றி விடுவாய்" என்று ஆவலோடு கூறினாள்.

சுந்த:—"ஆம். அப்படித்தான் நம்புகிறேன்; ஆயினும் இன்னும் என்னை யொன்றும் கேட்காதே. இப்போது வேண்டாம்" என்றாள்.

மீனு:—நானும் இதில் அபாயம் நேர்வதாயின் பங்கிட்டுக் கொள்ள ஆயத்தமா யிருக்கிறேன்.

சுந்த:—"இல்லையில்லை. அப்படி யொன்றுமில்லை" என்று கூறிவிட்டுப் பிறகு தனக்குத்தானே "முதல் குற்றம் முழுதும் என்னுடையதே யாதலின் இரண்டாவதும் என்னதாகவே யிருக்கவேண்டும்" என்று கூறிக் கொண்டாள்.

மீனு:—"என்ன அக்கா! ஏதோ கூறிக்கொள்கிறாயே?" என்றாள்.

சுந்த:—"வேறொன்றுமில்லை. இதில் நீ யுதவிசெய்யத்தக்கது ஒன்றுமில்லை யென்றேன். ஆ! உன்மனம் பெருங் கலக்கத்தி லிருக்கும். இரவு சரியாகப் பனிரண்டு மணிக்கு இங்குவருகிறாயா?" என்றாள்.

மீனு:—"சரியாக இரவு பனிரண்டு மணிக்கு வந்துவிடுகிறேன். அப்போது நீ சந்தோஷமான சமாசாரம் கூறும்படி ஆண்டவன் அருள் புரிவாரெனப் பிரார்த்திக்கிறேன்" என்று கூறிவிட்டு விடைபெற்றுக்கொண்டு சென்றாள்.

## 186-வது அத்தியாயம்.

வரதராஜனும் சுந்தராபாயும், இரகுபதியும் சங்கரனுமிருக்கும் மறைவிடம் சேர்தல்—தேவராஜைக் காப்பாற்ற வரதராஜன் எடுத்துக்கொண்ட முயற்சியில் மரணமடைதல்—இரகுபதி சங்கரன் இவர்களின் முடிவு—சுந்தராபாய் பொக்கிஷப் பெட்டியைத் திறந்து தனக்கு வேண்டிய பத்திரத்தை யெடுத்துக்கொண்டு சென்னூருக்குத் திரும்பல்.

மீனாட்சிச் சீமாட்டி தன் தமக்கையிடம் விடைபெற்றுக்கொண்டு சென்ற சுமார் பத்துநிமிடங்களுக்குள் வரதராஜன் இராஜகுமாரியிடம்வந்தான். சுந்தராபாய் அவன் முகத்தை நோக்கியபோது அவன் ஏதோ ஒருவிதத் தீர்மானமும் துணிகரமுமான சிந்தனையோடு வந்திருக்கிறான் என்று அறிந்துகொண்டாள்.

வரதராஜன் சுந்தராபாயை நோக்கி "அம்மா! நான் ஆயத்தமாக வந்திருக்கிறேன்; தாங்கள் தயாராக விருக்கிறீர்களா?" என்றான். சுந்தராபாய் "ஆகா! நான் சர்வாயத்தமாக விருக்கிறேன்" என்றாள்.

ஐந்து நிமிடங்களுக்குள் துணிகரமானவர்களும், எத்தகைய பாதகத்தைச் செய்யவும் ஆயத்தமாக விருப்பவர்களும், ஆனால் தேவராஜைக் காப்பாற்ற வேண்டுமென்ற ஒரே எண்ண முடையவர்களுமாகிய இவர்க ளிருவரும் ஹோட்டலைவிட்டுப் புறப்பட்டார்கள். சுந்தராபாய் கருத்தமுகமூடி யணிந்து கொண்டாள். வரதராஜன் தன் கழுத்திலணிந்திருக்கும் உயர்வாகிய கழுத்துப் பட்டையாலும், தாழ்ந்து தொங்கும் தலையணியாலும் பார்ப்போர் தன் முகத்தைக் கண்டறியாதபடி செய்துகொண் டிருக்கிறான். அவர்கள் இருவரும் நகர எல்லையைக் கடக்குமட்டும் பேசாமற் சென்றார்கள். அதன்பிறகு இராஜகுமாரி வரதராஜை நோக்கி

"எனக்கு நடக்கப்போகும் விவரங்களில் ஒன்றும் தெரியாது. ஆனால் உன் மனதில் அதைப்பற்றிப் பூரணமாக ஏற்பாடு செய்துகொண் டிருக்கிறாய்" என்றாள்.

வரத:—உண்மையே. கடவுளறிய இரத்தம் சிந்தாமலே காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளவேண்டும். அது அப்படியே நடக்கவேண்டுமென்பதே என் எண்ணம்-என் கோரிக்கை. அவர்கள் நித்திரை செய்யும்போது நாம் அப்பத்திரங்களைக் கைப்பற்றிக்கொள்ளப் பார்ப்போம். ஒரு சமயம்...ஒருசமயம்...நாம் துணிகரமாக வேலை செய்யாமல் அவற்றைக் கைப்பற்ற முடியாதெனின்....அத்தகைய சந்தர்ப்பம் நேர்ந்தால்....நேர்ந்தால்...நாம் பின்னிடையக் கூடாது" என்றான்.

சுந்த:—ஆம் ஆம். பின்னிடையலாகாது.

வரத:—இப்போது நான் தங்களிடம் கொடுக்கும் ஆயுதத்தைத் தாங்கள் சமயம் வாய்க்கும்போது உபயோகிக்கப் பின்னிடைய மாட்டீர்களல்லவா என்று நான் தங்களைக் கேட்கவேண்டியதில்லை. துரோகியாகிய அந்த வேவுகாரனைத் தண்டித்த கரம் இப்போது இத்தகைய சமையத்தில் பின்னிடையாதென்றே நான் நம்புகிறேன்.

சுந்த:—"நான் உபயோகிக்கவேண்டிய ஆயுதம் எது?" என்று தீரத்தோடு வினவினாள்.

வரதராஜு இதோ என்று தன் உட்சட்டையிலிருந்தெடுத்த ஒரு ஈட்டியையும் கைத்துப்பாக்கியையும் அவளிடமளித்து, "ஈட்டியைச் சமீபத்தில் உபயோகிக்கச் சந்தர்ப்பம் நேர்ந்தால் உபயோகிக்கவேண்டும்—துப்பாக்கி தூரத்தில் உபயோகிக்க வேண்டியதென்று நீர் அறிவீர்—பத்திரம் துப்பாக்கியின் இரட்டைக் குழலும் கெட்டிக்கப் பட்டிருக்கிறது. இவற்றைப் பத்திரமாக மறைத்து வைத்

துக்கொள்ளுங்கள்—நாம் அவர்களிடம் போய்ச் சேர்ந்தபின் தாங்கள் என்ன விவகாரம் நேர்ந்தாலும் என் செய்கைகளின் மேலேயே கண்ணேக்கம் வைத்திருங்கள்" இதை மறக்க வேண்டாம்.

சுந்த:—"அவ் விஷயத்தைப்பற்றி நீ பூரண நம்பகத்தோடிருக்கலாம்" என்றாள்.

பிறகு இருவரும் பேசாமல் சென்றார்கள். இரவு மிக்க இருட்டாக விருந்தது. வரதாராஜு முன்னடியே செல்ல வேண்டிய வழியை நன்றாய்ப்பார்த்துக்கொண்டிராவிட்டால் இப்போது அவர்கள் வழியறிந்து செல்வது மிக்க கஷ்டமே. சற்றுதூரம் சென்றபின் வாதாராஜு "நாம் இப்போது அந்த இடத்தை நெருங்கி வந்துவிட்டோம். இங்கு சமீபத்தில் ஒரு சிறு ஆறும் அதைக்கடக்கப் பாலமும் இருக்கவேண்டும்" என்றான்.

அவர்கள் சுமார் ஐந்தாறு கஜதூரம் சென்றதே அங்கு ஒரு சிற்றாற்றைக் கண்டார்கள். அங்கிருந்த மரப்பாலத்தைக் கடந்தார்கள். அதற்கப்புறம் கொஞ்சதூரம் சென்றதும் நெருங்கிய ஒரு தோட்டத்திற்குள் நுழைந்தார்கள். அங்கு மிக்க இருளாகவிருந்தது. ஆயினும் சுந்தராபாய் வாதராஜின் அருகில் அவனைத் தொடர்ந்துசென்றாள். வாதாராஜு "நாம் பேசாமல் நேராகச்சென்றால் வழி தவறிவிடமாட்டோம்" என்றான்.

சற்று தூரம் சென்றபோது அவர்கள் ஒரு வெளிப் பிரதேசத்தை யடைந்தார்கள். அது நன்றாகச் செப்பனிடப் பட்ட ஒரு நந்தவனமாகவிருந்தது. ஆனால் நெடுநாட்களாகப் பார்வையில்லாததால் எங்கும் பலவிதப் பூண்டுகள் முளைத்துப் பழுதடைந்திருந்தது. அதன் கோடியில் பாழடைந்த கட்டிடங்கள் புலப்பட்டன. இருவரும் அக்கட்டிடங்கள் இருக்குமிடத்தை நோக்கிச் சென்றார்கள்.

முன்பு அழகியமாளிகையாக விருந்த கட்டிடம் இப்போது பழுதுபட்டுப் பாழடைந்த விடமாக விருந்தது. இருவரும் அதன் மத்தியில் சென்றார்கள். அங்கு சற்று தூரத்தில் பூமியின் கீழிருந்து வருவதுபோன்ற ஒரு தீப்பிரகாசம் அவர்களுக்குப் புலப்பட்டது. இருவரும் அந்த விடத்திற் சென்றபோது கீழிறங்கிச்செல்லும் படிகள் புலப்பட்டன. அது அம்மாளிகையின் நிலவறைக்கிடங்கிற்குச் செல்கிறது. இருவரும் அதிலிறங்கிச் சென்றபோது மேற்பாதி திறந்திருந்த கிடங்கின் வாயிற்படிக்குள் இரகுபதியும் சங்கரனுமிருந்தார்கள். அவர்கள் இருவர்க்கும் இடையிலிருந்த தீபவொளியால் அவர்கள் முகங்கள் நன்கு தெரிந்தன.

காலடிச் சத்தத்தைக்கேட்டதே யிருவரும் ஒரே குரலாய் "யாரோ வருகிறார்கள்" என்றதும் சட்டென்று தங்கள் கைத்துப்பாக்கிகளை யெடுத்து வாயிற்படியிலுள்ள சந்துக்கு நேராக நீட்டினார்கள். வரதராஜு உறுதியான மொழிகளாய் "நண்பர்கள்; சுந்தரசிங் அரசனுடைய கடிதங்கள்-" என்றான். இவர்களுக்குள் பாதுகாப்பிற்காக எற்படுத்திக்கொண்ட வார்த்தைகள் அவைகளே.

இரகு:—ஆ! வரதராஜு! கூடயாரை யழைத்துவந்தாய்?

வரத:—"நமது புது முயற்சியில் யாரை நமது கூட்டத்தில் கண்டால் நீங்கள் சந்தோஷ மடைவீர்களோ அத்தகைய ஆளே" என்று கூறிக்கொண்டே சுந்தராபாயின் காத்தைப்பற்றி யழைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தான்.

சங்கரன் அம்மாதைக்கண்டதும் "ஆ! இராஜகுமாரியவர்கள். உங்களுக்கு நல்வரவு கூறுகிறோம்" என்றான்.

சுந்தராபாய் வரதராஜை நோக்கி "நீ இப்போது என் காத்தைப்பற்றி ஜாக்கிரதையாக அழைத்துச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. இது பல்லவபுரியிலுள்ள

என் அரண்மனையல்ல. இப்போது நமது உத்தம நோக்கம் கை கூடுவதற்காக நாம் எடுத்துக்கொள்ளும் புது முயற்சியில் எத்தகைய கஷ்டங்கள் ஆபத்துகள் நேர்ந்தாலும் சகித்துக்கொண்டு உங்களோடு சமபாகமாக உழைக்க நான் தைரியத்தோடு துணிந்திருக்கிறேன்" என்றாள்.

இரகு:-ஆ! இத்தகைய மொழிகளைக் கேட்க மிக்க சந்தோஷமடைகிறேன். இராஜகுமாரியே! தங்களுக்கு நல்வரவு கூறுகிறேன். நாங்கள் தங்களையே எங்கள் தலைவர்களில் ஒருவராக நம்பியிருக்கிறோம். ஆடவர்களில் வீரர்களாக விருப்பவர்களை மெச்சிக்கொள்வதைவிட மாதர்களாகிய வீரர்களை மிகவும் மெச்சிக்கொள்கிறோம். கூடிய சீக்கிரத்தில் நமது தாய் நாட்டின் நிலைமையைப்பற்றி ஒரு முடிவு செய்ய நமது நண்பர்களோடு நாம் ஒரு சபை கூடுவோம்" என்றான்.

அதற்குள் வரதாஜனும் சுந்தராபாயும் கீழ் அறையில் போய்ச் சேர்ந்ததால் நால்வரும் ஒரு கூட்டமாக உட்கார்ந்தார்கள். இரகுபதி "சென்னூரில் என்ன விசேஷ சமாசாரம்?" என்றான்.

வரத:—"அங்கு அவ்வாலிபப்பிரபு தண்டனையடைந்ததையன்றி வேறு விசேஷமில்லை. ஆனால் நானும் இராஜகுமாரியும் நெடுநேரம் ஆலோசனை செய்ததின்பேரில், நண்பர்களே! இவ்விஷயத்தில் அப்பிரபுவுக்கு நாம் உதவி செய்யவேண்டியது அவசியமல்ல என்று நீங்கள் இருவரும் தீர்மானித்ததே சரியானதென்று அபிப்பிராயம் கொண்டோம்" என்றான்.

சுந்த:—ஆம். நான் முதலில் ஒருவாறு சிந்தித்தேன். கடைசியில் வரதாஜன் எடுத்துரைத்த நியாயங்களின் பேரில் நீங்கள் கொண்ட அபிப்பிராயமே சரியானதென்றும், நமது முக்கிய நோக்கத்திற்கு அனுகூலத்தை யுண்

டாக்கத்தக்க காரணம் நேருமாயின் அப்போது இப் பத்திரங்களை யுபயோகிப்பதே மிக்க நலமாகுமென்றும் எனக்குப் புலப்பட்டது.

இராகு:—தங்கள் வாக்கினின்று இம்மொழிகளைக் கேட்க நான் மிக்க சந்தோஷமடைகிறேன். அந்த வாலிபப் பிரபு நமது காரியத்திற்கு உண்மையான உபகாரியாக விருந்தால் நாம் அவசியம் அவருக்கு உதவி செய்ய வேண்டியதே. ஆனால் இப்போதிருக்கும் நிலைமை யில் நாம் அவருக்கு உதவி செய்ய வேண்டிய அவசிய மென்ன விருக்கிறது?" என்றான்.

வரத:—ஆம். ஒன்றுமேயில்லை. இருக்கிற உண்மை அவ் வளவே.

இராகு:—"ஆ! இப்போது உன் புத்திக்குப் புலப்படுகிறதா? அவன் அந்தமாளிகையிலுள்ள இரகசிய நிலவறை களை நம் உபயோகத்திற்கு விடமாட்டான். நமது காரியசித்திக்கு அனுகூலமான ஒரு உதவியும் செய்ய மாட்டான். அதற்கு மாறாக அந்த நிலவறையிருக் கும் சங்கதியை இரகசியமானதென் றறிந்திருந்தும் அதிகாரிகளுக்கு அதையறிவித்து விட்டான். அந் தத் தஞ்சம்மாள் ஒளிந்துகொண்டிருந்த சங்கதியை யவன்றான் தங்கள் தங்கைக்குக் கூறியிருக்கவேண் டும். முடிவில் என்வரையில் அவனுக்கு உதவி செய்ய வேண்டிய காரணம் ஒன்றேனுமிருப்பதாக விளங்க வில்லை." என்றான்.

சங்க:—"எனக்கும் அப்படியே தோன்றுகிறது" என்றான்.

வரத:—அதைப்பற்றி யினிப் பேசவேண்டிய அவசியமே யில்லை. ஒரு வேளையில் அது மனதிலிருந்திருந்தாலும் இப்போது அது கனவாகப் போய்விட்டது. அப் பேச்சை யெடுப்பவர்கள் இனியாருமில்லை.

இரகு:—இதைப்பற்றி நானும் சங்கரனும் கூறிய தீர்மானத்திற்கு நீ ஒத்துக்கொண்டது உனது உண்மையான பெருந்தன்மையையும் களங்கமற்ற வுள்ளத்தையும் தெரிவித்தது. அதைப்பற்றி எனக்குச் சந்தோஷம்.

வரத:—நான் உங்களை விட்டுப் பிரிந்ததும் நமது இராஜகுமாரியிடம் சென்று நீங்கள் கொண்ட தீர்மானத்தையும் நான் அதற்கு ஒப்புக் கொண்டதையும் அறிவித்தவுடனே இவர்களும் அதற்கு ஒப்புக்கொண்டார்கள். பிறகுதான் நாங்கள் இருவரும் அதைப்பற்றித் தீர ஆலோசித்து உங்கள் தீர்மானத்திற்குத் தக்க காரணங்கள் இருக்கின்றன வென்பதை யறிந்தோம்.

சங்கரன்:—இப்பத்திரங்களால் நமது காரியத்திற்கு ஓர் பெரிய அனுகூலம் ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும். இப்போது நமக்கு அது புலப்படாதிருக்கலாகும். விசாரணையில் விசேஷ சம்பவம் ஏதேனும் நேர்ந்ததோ?

வரத:—நான் முன்னமே கூறியதைவிட வேறொரு விசேடமுமில்லை.

இரகு:—அக்கலகக் கூட்டத்தில் இருந்தவர்களுடைய பெயர்களையெல்லாம் கூறும்படி அதிகாரிகள் பிரபுவைக் கேட்பார்கள்.

வரத:—"சந்தேகமின்றிக் கேட்பார்கள்; அதனால் தற்சமயம் நாம் இங்கே யொளிந்திருப்போம். காலையில் தண்டனை நிறைவேற்றப்பட்டபின் நடந்த சங்கதியை யறிந்து கொள்ளலாம்" என்றான்.

இரகுபதி சுந்தராபாயை நோக்கி, "தங்கள் தங்கை சங்கதி யெப்படி? அவர்கள் அப்பிரபுவால் மயக்கப்பட்டு விட்டார்கள். மறுபடி நமது உத்தம கைங்கரியத்தில் வந்து சேருவார்களென்ற நம்பிக்கை யிருக்கிறதா?" என்றான்.

வரத:—நண்பனே! இவர்கள் தங்கையைப்பற்றி இவர்களிடம் பேசவேண்டாம். அதனல் இந்தம்மாளுக்கு நாம்மிக்க மனவருத்தத்தை யுண்டாக்குகிறவராவோம். தன் தங்கைமேல் எத்தகைய வெறுப்புண்டாகி யிருந்தால் அவர்களைக் காட்டிக்கொடுத்திருப்பார்கள் என்பதைச் சிந்தித்துப்பார். ஆயினும் அந்தம்மாள் தான் தப்பித்துக்கொள்ள ஒரு வழியை வைத்துக் கொண்டிருக்கிருர்களென்பது இராஜகுமாரிக்குத் தெரியாது" என்ருன்.

இராஜ:—"நான் செய்த சத்தியத்தை என்றும் மறக்கவில்லை. எத்தகைய சுற்றமாயினும் செல்வமாயினும், வேறு எதுவாயினும் சரி என் தாய் நாட்டின் க்ஷேமத்திற்கு ஆதாரமான காரியத்திற்குப்பின்ருன் என்பதே என்னுடைய துணிபு" என்ருள்.

வரத:—"நண்பர்களே! பார்த்தீர்களா சீமாட்டியவர்கள் இப்போது எல்லா ஆபத்துக்களிலிருந்தும் தப்பித்துக்கொண்டார்கள். இப்போது இவர்கள் தமது மாளிகைக்குச்சென்று ஒரு அச்சமுமின்றித் தங்கள் திரண்ட சொத்தினல் அனுபவிக்கக்கூடிய எல்லாப் போகபாக்கியங்களையும் நிம்மதியாய் அனுபவிக்கலாம். ஆனல், சே! அவர்கள் அதைச் சட்டைசெய்யவில்லை. தமது தாய் நாட்டின் க்ஷேமம் ஒன்றையே கருதி நமது எதிரிகள் நமக்குப் பெயரிட்டிருக்கிறதுபோல் இக்கலகக்காரர் கூட்டத்திலேயே சேர்ந்துகொண்டு அதனல் நேரிடக்கூடிய ஆபத்துக்களையெல்லாம் அனுபவிக்க ஆயத்தமாக விருக்கிருர்கள் என்று நமக்கு நன்ருய்த் தெரிகிறது" என்ருன்.

இராஜ:-"நண்பர்களே! இவர் என் நோக்கங்களைப் பகிரங்கப் படுத்திவிட்ட வரையில் இப்போது நான் இங்கு என்

வரவேண்டியதாக நேர்ந்தது என்பதை வெளிப்படையாய்க்கூற விரும்புகிறேன். அதைக்கூறவேண்டியதே. ஆம். அதாவது இப்போது இனி நமது காரியம் ஜெயமடைவதற்கு நாம் என்ன செய்யவேண்டுமென்பதைப்பற்றி நண்பர்களாகிய உங்களிடம் ஆலோசனை செய்யவேண்டுமென்பதற்காகவே நான் இப்போது இங்கு வந்தது" என்றாள்.

இவ்வாறு வரதராஜனும் சுந்தராபாய் இராஜகுமாரியும், இரகுபதியும் சங்கரனும் தாங்கள் அவர்கள் நோக்கப்படி நடக்கவே பூரண பிரியமும், மிக்க ஆவலுமுடையவர்களாக இருக்கிறதாக நம்பும்படிசெய்து விட்டார்கள். சற்று நேரம் பேசிக்கொண்டிருந்தபின் முக்கியமான சங்கதிகளனைத்தும் முடிந்தன. அப்போது இரகுபதி "இனி நாம் இராப்போஜனம் எடுத்துக் கொள்ளலாமே" என்றான்.

வரத:—நண்பனே! ஆகாரத்திற்கு வேண்டிய பொருள்களை நீங்கள் ஆயத்தம் செய்து வைத்திருப்பதாயின் உங்கள் முன் யோசனையை நான் அதிகமாகப் புகழ்ந்து கொள்வதோடு மிக்க சந்தோஷமடைவேன். ஏனெனில் உண்மையில் நான் நமது இராஜகுமாரியை யிங்கழைத்து வரும்போது, ஆடவாாகிய நமக்கில்லாவிடினும் சீமாட்டியவர்களுக்காவது நீங்கள் ஆகாரம் சேகரித்து வைத்திருப்பீர்களோ அல்லது நான் கொண்டு வருவேனென்று எண்ணியிருந்து விட்டீர்களோ வென்று எனக்கு மிக்க சந்தேகமாகவே யிருந்தது" என்றான்.

இரகு:-"நாங்கள் ஆகாரத்திற்கு உன்னையெதிர்பார்க்கவில்லை. ஏனெனில் நீ எந்த வேளைக்கு வருவாயென்பதை எங்களிடம் கூறவில்லை. ஆகையால் நாங்களே போதுமான உணவுப் பொருள்களைக் கொண்டுவந்து வைத்

துக் கொண்டோம். இதோ சங்கரன் அது உண்மையென்று ருசுப்படுத்துவான்" என்று கூறிக்கொண்டே இராந்தலையெடுத்துப் பாழடைந்த அப்பிரம்மாண்டமான நிலவறைக் கட்டிடத்தின் ஓர் பக்கம் அதன் பிரகாசம் படும்படி காட்டினான். சங்கரன் உடனே எழுந்து சென்று அங்கிருந்த ஒருபெரிய துவாரத்திலிருந்து இரண்டு தோற்பைகளை யெடுத்தான்.

ஒரு பையில் மாற்றுடைகளிருந்தன. இன்னொரு பையில் ரொட்டிகளும் சமைத்த மாமிசமும் சாராயவகைகளும் பழங்களும் இருந்தன.

வரதராஜு மிக்க சந்தோஷமடைந்தவன்போல் அபிநயம் செய்து "ஆ! இந்தப் பாழான கட்டிடத்தைப் பார்த்தபோது நீங்கள் இப்படி ஆகாரம் கொண்டு வந்திருப்பீர்களென்று நான் கருதவில்லை" என்றான்.

இரகு:—"இது பாழடைந்த கட்டிடமாயினும் நாங்கள் முன்பே நமக்குவேண்டும் ஆகாரத்தை யெப்படியோ சேகரம் செய்திருக்கிறோம். இந்தப்பாழடைந்த கட்டிடத்தின் அதோ அந்த மூலையில் ஒரு சௌகரியமான இடமிருக்கிறது. அங்கு உலர்ந்த வைக்கோல் பரப்பப்பட்டிருக்கிறது. அங்கே நமது சீமாட்டி சௌக்கியமாய்ச் சயனித்துக்கொள்ளலாகும்" என்றான்.

வரத:—"ஆ! இப்போதுதான் எனக்கு நினைவு வந்தது. நமக்கு முக்கியமான அக்கடிதங்களை மிக்க சாக்கிரதையாகவே சரியான விடத்தில் வைத்திருக்கிறீர்களென்று நம்புகிறேன்" என்றான்.

இரகு:—"இதோ இப்படிவா காட்டுகிறேன்" என்று வரதராஜை யழைத்துச்சென்று அக்கடிதங்கள் அடங்கிய பெட்டியிருக்குமிடத்தைக்காட்டினான். அந்த இடம்

சுவரில் இவர்கள் தோண்டியெடுத்த ஒருமாடம்— அதில் அப்பெட்டியை வைத்துவிட்டு வெளியில் பார்ப்போர் காணவொட்டாமல் கற்களை யடுக்கிவிட்டார்கள். அது தரையிலிருந்து இரண்டடி உயரமேயிருக்கிறது. இரகுபதி அந்தவிடத்தில் முதுகை வைத்துச் சாய்ந்து உட்கார்ந்துகொண்டு "பார்த்தாயா! நான் இப்படியே யுட்கார்ந்து கொண்டிருப்பேன். யாராவது இப்பெட்டியை யெடுப்பதாயின் என்னைத் தொடாமல் எடுக்கமுடியாது. ஒரு சமயம் யாரேனும் நமக்குத் தெரியாமல் கள்ளத்தனமாக இங்கு வந்து இந்த விடத்தைப் பார்த்துக் கொண்டு போயிருந்து பிறகு நம்மை யேமாற்றி இதைக் களவாட வந்தால் முடியாது" என்ருன்.

வரதராஜு "பேஷ். நீ செய்த யோசனை மிக்க நல்லதே. ஆனல் நீ யொருவனே இரவு முழுமையும் இதைக் காவல் புரியும் கஷ்டத்தை யெடுத்துக்கொள்ளலாகாது. அது தருமமல்ல. நாம் மூவரும் அக் கஷ்டத்தைப் பங்கிட்டுக் கொள்ளவேண்டும்" என்ருன்.

அதன் பிறகு யாவரும் போசனத்திற்கு உட்கார்ந்தார்கள். அவர்களிடம் ஒரு புட்டி ஒயின் அதாவது திராக்ஷ ரசபானமும், இரண்டு புட்டிகள் காரமானசாராயமும் இருந்தன. வரதராஜு தந்திரமாய் "நண்பர்களே! நாம் ஒயின் புட்டியை இராஜகுமாரிக்கு அளித்து விடுவதுதான் மரியாதை" என்ருன்.

அவ்வாறே ஒயின் புட்டி யளிக்கப்பட்டபடியால் ஆடவர் மூவரும் காரமான சாராயத்தையே குடிக்கவேண்டியதாயிற்று. வரதராஜு இவ்வாறு தந்திரமாக ஏற்பாடு செய்தான். மூவரும் குடிக்கும்போது அவன் இரகுபதிக்கும் சங்கரனுக்கும் அன்போடு உபசரிப்பவன்போல் அவர்களையே

யதிக சாராயம் குடிக்கச்செய்தான். ஆனால் தானும் அவர்க ளோடு குடிக்க நேரிட்டபோதெல்லாம், குடிப்பதுபோல் அபிநயம் செய்தானேயன்றி ஒரு துளி சாராயங்கூடப் பருகியவனல்ல.

போஜனம் அருந்திக்கொண் டிருக்கையில் அவனும் இராஜகுமாரியும், இரகுபதி சங்கரன் இவர்கள் கட்சியில் மிக்க உறுதியுடையவர்கள் போல் பேசினார்கள்.

போஜனம் முடிந்ததும் வரதராஜு இராஜகுமாரியை நோக்கி, "சீமாட்டியே! தாங்கள் போய் நித்திரை செய்யுங் கள். ஏனெனில் நாளைக்கு நாம் சுறுசுறுப்பாக வேலைசெய்ய வேண்டி யிருக்கலாம். நாங்களோ கஷ்டங்களுக்குப் பழகிய வர்கள்" என்றான்.

இராஜகுமாரி "இவன் ஒரு காரியமாகவே இப்படிக் கூறு கிறான்" என்றுணர்ந்துகொண்டு, "நண்பர்களே! உங்கள் ஆலோசனை யெதுவாயினும் அந்தப்படி நடக்கச் சித்தமாக விருக்கிறேன்" என்று மற்ற இருவருக்கும் சேர்த்துக் கூறு வதுபோல் தந்திரமாய்க்கூறி உடனே தன் சயன இடத்திற் குப் புறப்பட்டாள்.

வரதராஜு "இதோ இப்போர்வையைப் போட்டுக் கொள்ளுங்கள்" என்று ஒரு கம்பளிப்போர்வையைக் கை யில் எடுத்துக்கொண்டு அவள்கூடச் சென்றான். இரகுபதி சங்கரனிடத்தில் "சங்கரா! தீபத்தை யெடுத்துச்சென்று சீமாட்டி படுக்கை யிருக்குமிடம் சேருமட்டும் வெளிச்சம் காட்டு" என்றான்.

சங்கரன் தீபம் கொண்டுவருவதற்குள் வரதராஜு குசு குசுவென்று இராஜகுமாரியிடம் "சீமாட்டியே சமயம் வரும் பட்சத்தில் தாங்கள் சங்கரனைப் பார்த்துக்கொள்ள வேண் டும். எதற்கும் பின்னிடைய வேண்டாம்" என்று கூறி

விட்டுப் பிறகு யாவர்க்கும் கேட்கும்படியாய், "இதோ இந்த விடந்தான்" என்றான்.

அங்கு அறைபோன்றிருந்த ஒரு இடத்தில் வைக்கோல் பரப்பப்பட்டிருந்தது. சிமாட்டி அதில் சயனித்துக்கொள்ள உட்கார்ந்தாள். வரதராஜு குனிந்து வைக்கோலை ஒருமட்டமாக்கிக்கொண்டே அவள் செவியில் "மிக்க எச்சரிக்கையாக விருங்கள். சங்கரன் தங்கள் பங்கு" என்றான். பிறகு வரதராஜும் சங்கரனும் விளக்கோடு திரும்பி இரகுபதியிருக்குமிடத்திற்குச் சென்றார்கள்.

சங்க:—"என்ன காரணமோ! அதிகமாய்க் குடித்துவிட்டேனோ அல்லது இச்சாராயமே மிக்க போதையுடையதோ தெரியவில்லை. எனக்கென்னமோ நித்திரை வருகிறது. நான் வரதராஜு சொன்னபடி நித்திரை செய்யப்போகிறேன்." என்றுகூறிவிட்டுத் துப்பட்டியைப் போர்த்துக்கொண்டு படுத்து விட்டான்.

இரகுபதிசுவரில் பெட்டி வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்குச் சரியாய் முதுகைவைத்துச் சாய்ந்து முக்காடிட்டு உட்கார்ந்து கொண்டான். அவன் வரதராஜை நோக்கி "வரதராஜு முதல் முறை நீ காவலிரு; இரண்டுமணி நேரங்கழித்து நான் உன்னை விடுதலை செய்கிறேன். அந்த வேளைக்கு நன்றாய் விழித்துக்கொள்வேன் என்று நம்பு; உண்மையில் நான் குடிக்கவேண்டிய அளவிற்குக் கொஞ்சம் அதிகமாகவே குடித்துவிட்டேன்." என்றான்.

இப்போது அங்கு நிர்ச்சந்தடியாயிருந்தது. வரதராஜு வளைவான உள்வாயிற்படியினருகில் உட்பக்கம் நின்றான். அவனுக்கப்பால் சற்று உள்ளே அவனுடைய இடப்பக்கம் இரகுபதியிருக்கிறான். இன்னும் உள்ளே வலது பக்கம் சங்கரன் இருக்கிறான். அப்பால் கோடியில் சுமார் பனிரண்டு கெஜ தூரத்தில் இராஜகுமாரி இருக்கிறாள். வரத

ராஜு விளக்கு வெளிச்சத்தால் இரகுபதி, சங்கரன் ஆகிய இருவர் முகங்களையும் பார்க்கக்கூடிய இடத்தில் நின்று கொண்டான். தன் முகத்தை யேதோ ஆழ்ந்த சிந்தனையி லிருப்பவன் முகம்போல் வைத்துக்கொண்டான். ஏனெனில் இரகுபதி அதிகமாகக் குடித்து விட்டதாகக் கூறினாலும் இன்னும் கண்ணை மூடவில்லை. சங்கரன் மட்டும் உடனே நித்திரை போய்விட்டான்.

வரதாராஜு இரகுபதியை நோக்கி "இவன் என்ன சந்தேகம் கொண்டிருக்கிறானோ? அப்படியாயின் உடனே பகிரங்கமாய்த் தாக்கலாமா? இவன் இப்படி உட்கார்ந்திருக்கையிலேயே சுட்டுவிடலாம். ஆயினும் எதிலும் முடியாத பட்சத்தில் தான் அப்படிச் செய்யவேண்டும்" என்று தனக்குள் சிந்தித்துக் கொண்டான்.

சில நிமிடங்கள் கழித்து இரகுபதி கண்களை மூடினான். பிறகு உடனே திறந்து கொண்டான். சற்று நேரங்கழித்து, "சே! என்ன சனியன்! வரதாராஜு! எனக்கு நித்திரை செய்யப் பிரியமில்லை. ஏதோ கெடுதி சம்பவிக்குமென்று என்மனதிற் படுகிறது" என்றான்.

வரத:—"அப்படியா? இந்த ஊர்ப் போலீஸார் வருவார்களென்று அஞ்சுகிறாயோ? அப்படியாயின் தீபத்தை யணைத்து விடட்டுமா?" என்றான்.

இரகுபதி "வேண்டாம்; ஆபத்து நேர்வதாயின் நமது எதிரிகள் யார் என்று நமக்குத் தெரியவும், அப்போது நாம் எவ்வாறு நடந்துகொள்வதென்பதை யறியவும் வெளிச்சம் இருக்கவேண்டும். சே! ஆயினும் நான் நினைப்பது முட்டாள் தனமென்றே நம்புகிறேன்" என்றான்.

வரத:—சந்தேகமென்ன! வீண்பீதி நாமே வைத்துக் கொள்ளலாகாது. அதை மறந்துவிடு. நான் மிக்க எச்

சரிக்கையாகவே யிருப்பேன். என்காதும் கண்களும் மிக்க ஜாக்கிரதை யுடையவை.

இரகு:—"நல்லது; நான் நித்திரை செய்ய முயல்கிறேன்" என்றான்.

அதன் பிறகு அவன் மறுபடி கண்களை மூடிக்கொண்டான். வாதராஜு "இவன் மனதில் கெடுதி நேரிடுமென்று தோன்றுகிறது. ஆயினும் நம்மேல் இவனுக்குச் சந்தேகமில்லை" என்றெண்ணிக்கொண்டான்.

சில நிமிடங்களில் இரகுபதி நித்திரை செய்கிறானென்று தெரிந்தது. ஆ! அரைமணிநேரம் வரையில் வாதராஜு தான் நின்றவிடத்தை விட்டு நகரவில்லை. அதற்கு மேல், "சரி; இனி நமது காரியத்தை முடித்துக்கொள்ள வேண்டியதே" யென்று எண்ணிக்கொண்டான்.

வாதராஜு மெதுவாய் ஆகாரம் முதலியவை வைத்திருந்த பையருகிற்சென்று அதிலிருந்த ஒரு சாராயப்புட்டியைக் கையிலெடுத்துக்கொண்டு அதே சமயம் அப்பையின் மேல் கட்டப்பட்டிருந்த கயிற்றை யெடுத்து மடியில் மறைத்துக் கொண்டான். பிறகு தன் இடத்திற்குச் சென்று சாராயத்தில் கொஞ்சம் பருகினான். இரகுபதி ஒரு சமயம் கண்களைத் திறந்து பார்த்தால் தான் புட்டியை யெடுப்பதற்கே பையினருகிற் சென்றதாய் எண்ணிக்கொள்வானென்று அவ்வாறு செய்தான். இரகுபதி விழித்துக்கொள்ளவில்லை. அதன் பிறகு மெதுவாய் அவன் அருகில் சென்று நின்று முதுகையவன் பக்கம் திருப்பிக்கொண்டு கயிற்றைக் கையிலெடுத்துக்கொண்டு சந்தாராபாய் இராஜகுமாரியிருக்கும் இடத்தைநோக்கிச் சமிக்கை காட்டினான். அவள் இருட்டிலிருந்தாலும் வெளிச்சத்தில் நிற்கும் தன்னைப் பார்த்துக்கொண்டிருப்பாள் என்று அவனுக்குத் தெரியும்.



186503 186503

அவன் கருதியபடி அவன் சமிக்கை செய்தவுடனே சுந்தராபாய் இருக்குமிடத்தில் சலசலவென்று வைக்கோலின் சத்தம் கேட்டது. வரதராஜு உடனே திரும்பிக்கயிற்றின் சுருக்கை இரகுபதியின் புயங்களைச்சுற்றிப் போட்டுத் துரிதமாக இழுத்து விட்டதோடு அவனைக் கீழே தள்ளி அவன் மார்மேல் முழங்காலை வைத்தழுத்திக் கொண்டான்.

இரகுபதி 'அட துரோகி!' என்று கண்களில் கோபத் தணல் வீசக் கூவினன். அச்சத்தத்தைக் கேட்டதும் சங்கரன் "ஓ! என்னகூச்சல்!" என்று துள்ளி யெழுந்தான். வரதராஜு இரகுபதியை யழுத்திக்கொண்டபடியே தன் துப்பாக்கியைச் சங்கரனுக்கு நேராக நீட்டி "நீ துப்பாக்கி யெடுக்க முயன்ருயோ உடனே செத்தாய்" என்ருன்.

அதே விநுடி இராஜகுமாரி சங்கரன் அருகில் சென்று 'நீ இணங்கி விடவேண்டும்' என்று கூறிக்கொண்டே தன் கையிலிருக்கும் ஈட்டியின் முனை அவன் மார்பில் படும்படி தொட்டாள். சங்கரன் பிரமித்து நின்ருன். அவன் மிரட்சியடைந்து விழிப்பதைக்கண்ட இரகுபதி "அடே கோழைப்பயலே!" என்று கோபத்தோடு கூவினன்.

வரதராஜு தன் துப்பாக்கிக் குழாயை இரகுபதியின் கன்னத்தில் வைத்து "அடே! வாயை மூடிக்கொண்டிரு. இன்றேல் உன் மூளைசிதறிவிடும்" என்று கூறி இராஜகுமாரியை விளித்து உங்கள் ஆளை நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள் என்ருன். சங்கரன் ஆகா! என்றுகூறிச்சட்டென்று இரண்டடி பின்னிடைந்து துரிதமாகத் தன் உட் சட்டையிலிருக்கும் துப்பாக்கியை யெடுத்தான். மறு விநுடி துப்பாக்கி பிடித்த அவன் கரம் மேலுக்குத் தட்டப்பட்டது. துப்பாக்கி வெடித்துக் குண்டு மேலே சென்றது. அதே விநுடி சுந்தராபாயின் ஈட்டி அவன் இருதயத்தில் பாய்ந்து விட்டது.

அதே சமயம் இரகுபதி மிக்க ஆங்காரத்தோடு கூவிக் கொண்டே தன் பலம் முழுமையும் கொண்டு வரதாராஜைத் தன் மேலிருந்து தள்ளிவிட்டு இமை கொட்டுமுன் தன் தோள்மேலிருந்த கயிற்றைக் கழற்றிவிட்டு வரதாராஜின் காத்திலிருந்த துப்பாக்கியை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டு ஓங்கி அவன் மண்டைமேலடித்தான். இப்போது நடக்கும் சம்பவங்களனைத்தும் ஒரு நிமிடத்திற்குள் ஒன்றின் பின் ஒன்றாக நடக்கின்றன. இரகுபதி மேற்கண்டவாறு வரதாராஜின் மண்டைமேலடித்துவிட்டுக் கையை மேலே தூக்கிக்கொண்டே துரிதமாக எழுந்திருக்கப் போனான். அச்சமயம் பின்பக்கம் இரண்டு புயங்களுக்கும் மையஸ் தானத்தில் சுந்தராபாயின் ஈட்டி பாய்ந்து விட்டது.

சுந்தராபாய் சங்கரனைக் கொன்றுவிட்டுத் திரும்பும் போது இரகுபதி வரதாராஜைத் தள்ளுவதையும் பிறகு நடந்த சம்பவத்தையும் பார்த்துக்கொண்டே இரண்டு தாண் டாய் இரகுபதி யருகில் வருவதற்குள் அவன் வரதாராஜை யடித்து விட்டான். வரதாராஜு விழுந்து விட்டால் பிறகு தன் உயிர் தப்பாது என்ற நிகிலே அம்மாதுக்கு இல்லாத பலத்தை யளித்து விட்டது. இரகுபதி மண்டைமே லடித்த அடியால் வரதாராஜின் மண்டை யுடைந்து அவன் இறந்து போனான். சங்கரனும் இரகுபதியும் சுந்த ராபாயின் கையால் மாண்டார்கள். கடைசியில் அம்மாதே அந்த இரணகளத்தில் ஜெயசீலியாய் நின்றாள். ஆனால் அவள் மனம் என்ன நிலைமையிலிருக்கும்?

இதோடு சுந்தராபாய் சீமாட்டி மூன்று பேரைக் கொன்றிருக்கிறாள். இக்கொலைகளுக்கெல்லாம் ஆதிகார ணம் தானே என்று அவள் மனதிற்கே புலப்பட்டது. முதல் முதல் தேவராஜுக்கும் தன் சகோதரிக்கும் தானே பிராணபத்தை யுண்டாக்கினாள். அதுவும் அவளே தவறான

அபிப்பிராயங்கொண்டு தன் தங்கைமேலுண்டான பொறாமையால் அவ்வாறு செய்தாள். பிறகு தானே தேவராஜைக் காப்பாற்றவேண்டுமென்று வரதராஜைப் பலவந்தப் படுத்தினாள். ஒரு விஷபத்தில் தேவராஜைக் காட்டிக் கொடுக்கும்படி வரதராஜே முதலில் சுந்தராபாயைத் தூண்டினவன். ஆனால் பின்னால் சீமாட்டி கொண்டது தவறான அபிப்பிராயம் என்றறிந்தபின் அவன் மனவேதனை யடைந்து தேவராஜைக் காப்பாற்ற வேண்டுமென்று தீர்மானித்தான். கடைசியில் அவனும் மாளவேண்டியதாயிற்று. தேவராஜைக் காப்பாற்றச் சம்மதிக்காமலிருந்த துஷ்டர்களும் மடிந்தார்கள்.

சுந்தராபாய் இராஜகுமாரி மூன்று சவங்களின் மத்தியில் சற்று நேரம் பிரமித்து நின்றாள். முதலில் யாவும் அவளுக்குக் கனவுபோல் தோன்றியன. பிறகு சற்று நேரங்கழித்துப் பெரு மூச்சைவிட்டு நாற்புறங்களிலும் நோக்கினாள். உடனே இன்னும் செய்யவேண்டிய காரியம் இருக்கிறதென்று நினைத்தாள்...முதலில் கீழே விழுந்து கிடப்பவர்களில் யாருக்கேனும் உயிர் இருக்கிறதா என்று ஒவ்வொருவரையும் தொட்டுப்பார்த்தாள். ஆனால் மூவர் தேகங்களும் சில்லிட்டுப் போய் விட்டன.

பிறகு இரகுபதியின் சவத்தருகில் குனிந்து அவன் சேபிகளைச் சோதித்து அவற்றி லொன்றிலிருந்த சாவியை யெடுத்துக்கொண்டாள். பிறகு மிக்க ஜாக்கிரதையோடு சுவரின் துவாரத்திலிருந்த பெட்டியை யெடுத்தாள். சற்று திகிலோடு மெதுவாய்ச் சாவியினால் அதைத்திறந்தாள். ஏனெனில் சற்றுநேரத்திற்குமுன் இரகுபதி அப்பெட்டியில் வெடிமருந்து வைத்திருப்பதைப்பற்றிக் கூறிய விவரமனைத்தும் அவள் மறந்து விடவில்லை. ஆயினும் பக்குவமாய்த்

திறந்து அதிலிருந்த கடிதக்கட்டை யெடுத்துக் கொண்டாள். இனி யங்கிருப்பதில் பயனில்லை.

சுந்தராபாயின் மனதில் இப்போது ஒருவித சந்தோஷ முண்டாயிற்று. அச்சமயம் தான் பெரியதியாகம் செய்து ஒரு உயிரைக் காப்பாற்றப் போவதாகக் கருதினாளே யன்றித் தான் செய்த கொலைபாதகங்களை நினைக்கவில்லை. உடனே தீபத்தை யணைத்து விட்டு அங்கிருந்து சென்னூரை நோக்கித் துரிதமாய் நடந்தாள்.

---

## 187-வது அத்தியாயம்.

சுந்தராபாயும் மீனாட்சிச் சீமாட்டியும் அவர்களின் ஏற்பாடுகளும்—சுந்தராபாய் துக்காபாய் என்ற பெயரோடு மடம் சேர்தல்—தாயின் அளவு கடந்த அன்பு—தேவராஜூ விடுதலையடைதலும் சந்தோஷமும்.

சுந்தராபாய் இராஜகுமாரி சோாகத் தான் தங்கி யிருக்கும் ஹோட்டலுக்குச் சென்றாள். அங்கு சென்றதும் ஆயாசத்தோடு கொஞ்சம் தாகபானஞ்செய்தாள். அப்போது மணி பதினொன்றுக்கு மேலாய்விட்டது. சரியாகப் பனிரண்டு மணிக்குத் தன் தங்கையை வரும்படி கூறியிருப்பது அவள் நினைவிற்கு வந்தது. உடனே தான் கொண்டு வந்த கடிதக்கட்டை ஒரு சிப்பமாகச் செய்து அதன்மேல் "தேவராஜூப் பிரபுவினால் இராஜுவ நியாய சபைப் பிரதம நியாயாதிபதிக்கு அனுப்பப்பட்டது" என்று எழுதி ஆயத்தமாய் வைத்துக்கொண்டாள்.

அக்கடிதம் எழுதி முடிந்த மறுநிமிடம் இராஜகுமாரியின் தங்கையாகிய மீனாட்சிச் சீமாட்டி தான் கூறிய வேளைக்குச் சற்று முன்பாகவே வந்து விட்டாள். அவள் அறைக்குள் வந்ததும் "அக்கா! என்ன சங்கதி?" என்றாள்.

இராஜகுமாரி:—"அவர் காப்பாற்றப்பட்டார். காப்பாற்றப் பட்டார்" என்றாள்.

இம்மொழிகளைக் கேட்டதே மீனாட்சிச் சீமாட்டி அடக்கமுடியாச் சந்தோஷமடைந்து தன் தமக்கையின் மேல் வீழ்ந்து அவளை யாலிங்கனம் செய்து கொண்டு "அக்கா! நீ செய்த கெடுதிகளுக்கெல்லாம் ஈடு செய்து விட்டாய்; கடவுள் உனக்கு நல்ல ஆசீர்வாதமளிப்பார். உன் பாபங்களனைத்தும் மன்னிக்கப்படும். நீ அவற்றிற்குத் தக்க ஈடு செய்து விட்டாய். அவர் எப்படிக் காப்பாற்றப் பட்டார்?" என்றாள். சுந்தராபாய் தன்னிடமிருந்த கடிதக் கட்டைத் தன் தங்கையிடமளித்து "இதோ இதில் சுந்தரசிங் அரசன் கலகக்காரர்களுக்கு எழுதிய கடிதங்களனைத்து மிருக்கின்றன. இதைத் துரைத்தனத்தார் வசம் அளித்துத் தேவராஜப் பிரபு தமது உயிரைக் காப்பாற்றிக்கொள்ளலாம்" என்றாள்.

இம்மொழிகளைக் கேட்டதே மீனாட்சிச் சீமாட்டி மிக்க சந்தோஷமடைந்தாள். ஆனால் மறு நிமிடம் அவளுக்கு பெரும் பிரமையும் கலவரமும் வெறுப்பும் அசிங்கமும் உண்டாகி இரண்டடி பின்னிடைந்து தன் தமக்கையை மிரட்சியோடு நோக்கி,

"ஐயோ! அக்கா! இதென்ன உன் உடையில் இரத்தக்கறை" என்றாள்.

சுந்தராபாய் "ஆ! இரத்தமா? ஆம்; இரத்தம்; சரிதான். இருந்தாலென்ன? நான் செய்த ஒரு பெரும்பாதகத்திற்காக அதைச் சரிப்படுத்த வேறு பாதகங்களைச் செய்ய வேண்டியதாக விருந்தது. குற்றமற்ற ஒருவனுக்கு என்னால் மாண முண்டாவதைவிட எத்தனை கொலைகளைச் செய்தேனும் அதைத் தடுக்கவேண்டுமென்று தீர்மானித்து விட்டேன்" என்றாள்.

தங்கை:—"ஓ! கடவுளே! அக்கா! நீ என்ன காரியம் செய்தாய்?" என்று கூறிக்கொண்டே அங்கிருந்த ஒரு நாற்காலியில் தள்ளாடிக்கொண்டு உட்கார்ந்து சாய்ந்து விட்டாள். அவள் மனதில் சொல்லொணு வேதனை யுண்டாகி வருத்தியது.

சுந்த:—நான் என்ன செய்தேனே அதைப்பற்றி அக்கரையில்லை. இக்கடிதங்களைக் கொண்டுவா இரத்தம் சிந்த வேண்டியதாக விருந்தது. நான் இவற்றைக் கொண்டு வருவதாய் வாக்களித்து விட்டேன். இவற்றைக் கொண்டுவந்து நிரபராதியாகிய அந்தப் பிரபுவைக் காப்பாற்றுவது எனக்குச் சந்தோஷமாக விருக்கிறது. அதற்காக நான் என்ன செய்திருந்தாலும் அக்கரையில்லை. இனி அந்த வேலையை நிறைவேற்றுவதில் ஆலசியம் நேரிடலாகாது. நான் இதைக் கொண்டு போய்க்கொடுக்கும் நிலைமையிலில்லை. என் உடைகளில் இரத்தக்கறைகள் இருக்கின்றன. இந்த இராணுவ நியாயாதிபதி யிவற்றைக்கண்டால் பெரிய சந்தேகங் களுக்கிடமுண்டாகும். இதுமட்டுமல்ல. தேவராஜப் பிரபு தம்மைக் காப்பாற்றக் கொண்டு வரப்பட்ட இப் பத்திரங்கள் இந்த விதமாகக் கொண்டுவரப்பட்டன வென்றறிந்தால் இத்தகைய உதவியை யேற்றுக் கொள்ளக் கட்டாயம் மறுத்துவிடுவார்.

தங்கையே! நீயே இந்தச்சந்தோஷ சங்கதியைக்கொண்டு போகத் தகுதியானவள். உன் உள்ளத்தில் எத்தகைய குற்றத்தின் மாசுமில்லை. உன் உள்ளம் பரிசுத்தமாக விருக்கிறது. ஆகையால் தயவு செய்து நீயே யிக்காரியத்தைச் செய்யவேண்டும். ஆனல் ஒருவிஷயம்—அதாவது, இக்காரியத்தை நிறைவேற்றுவதில் என் முயற்சி யதிகமாகவிருந்த

தென்பதை மட்டும் தேவராஜப்பிரபு அறியும்படி செய்” என்றாள்.

மீனா:—“அக்கா! இக்கடிதங்கள் கொண்டு வரப்பட்டது முழுமையும் உன் முயற்சியாலேயே யென்று அப்பிரபுவுக்கு நன்றாய் விளங்கும்படி நான் கூறுவேன். ஆனால் அதற்காக இத்தகைய பாதகச்செயல் நடந்ததென்பதை நான் ஒருபோதும் கூறமாட்டேன்” என்றாள்.

சுந்தராபாய் “தங்கையே! இவ் விஷயத்தில் என் அபிப்பிராயத்தைக் கூறிவிட்டேன். இனி யுன் விருப்பப்படி செய்யலாகும். நீ இனி ஆலசியம் செய்யாமல் போய் அப்பிரபு, அவர் தாயார் இவர்களின் மனோ வேதனையை யொழித்து விடு. அந்த வேலையை முடித்துவிட்டுச் சீக்கிரம் என்னிடம் வா. ஏனெனில் நான் உன்னிடம் ஒரு விசேஷமான முக்கிய சமாசாரம் கூறவேண்டியதிருக்கிறது” என்றாள்.

மீனாட்சிச்சீமாட்டி உடனே அங்கிருந்து புறப்பட்டுச் சென்றாள். அவள் போய்த் தான்சென்ற வேலையைத் திருப்தியாய் நிறைவேற்றிவிட்டு ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே திரும்பித் தன் தமைக்கையிடம் வந்தாள்.

மீனாட்சி மறுபடி தன் தமக்கையை யாலிங்கனம்செய்து கொண்டு தான்சென்று சங்கதியைக் கூறியதையும் அங்கு நடந்த சமாசாரங்களையும் விவரமாகக் கூறினாள். அந்த விஷயங்களை நாம் தக்க விடத்தில் கூறுவோம். மீனாட்சி தான் திரும்பி வந்தபோது தன் தமக்கை வேறு உடை யணிந்திருப்பதையும், அருகில் ஒரு பெரிய மூட்டை யிருப்பதையும் கண்டாள்.

சுந்தராபாய் “இப்போது நீ என் கூடவா!” என்று எழுந்தாள். மீனாட்சி மிக்க வியப்படைந்து “இந்த வேளையில் இரவு ஒரு மணிக்கு எங்கே செல்கிறாய்? யாரேனும் பார்த்தால் என்ன நினைப்பார்கள்?” என்றாள்.

சுந்தராபாய் "உன் யோக்கியதை யாவர்க்கும் நன்ருகத் தெரிந்தே யிருக்கிறது. உன்மேல் சற்றும் சந்தேகம் கொள்ளமாட்டார்கள். நானே அயோக்கியதையில் முழுகி விட்டேன். இனி உலகம் என்னை யென்ன கூறினும் அது எனக்கு உறைக்காது. இனிப் புறப்படு" என்ருள்.

மீனுட்சி மறுபடி "எங்கே போகிருய்? நீ பேசுகிற மாதிரி எனக்குப் பீதியை யுண்டாக்குகிறது. அய்யோ கடவுளே! தற்கொலை...." என்றதே,

சுந்த:—"இல்லை இல்லை. தற்கொலை செய்துகொள்ளவல்ல. அப்படி யிருந்தால் இரத்தக்கறைபட்ட இந்த உடைகளை மறைக்க நான் இவ்வளவு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. அதோடு நான் தற்கொலை செய்துகொள்வதைப் பார்க்கும்படி உன்னை யழைப்பேனு?" என்ருள்.

அதற்குள் இருவரும் நகர ஓரத்தில் ஆற்றின்மேலிருக்கும் பாலத்தருகில் சேர்ந்தார்கள். சுந்தராபாய் "இங்கே சற்று நில்" என்று கூறிப் பாதையோரமிருந்த இரண்டுகற்களை யெடுத்துத் தன் கையிலிருந்த மூட்டையோடு சேர்த்துக்கட்டி ஆற்று வெள்ளத்தில் எறிந்து விட்டாள். மீனுட்சி தன் தமக்கையை நோக்கி "இன்னும் எங்கே போகிருய்?" என்ருள்.

சுந்தராபாய் "நான் போகவேண்டிய இடம் சமீபத்திலேயே யிருக்கிறது. நான் உலக விவகாரங்களை யடியோடு விட்டுவிடப் போகிறேன். நான் செய்த பாபங்களுக்குப் பிராயச்சித்தம்வேண்டும். ஆனுல் உலகை விட்டொழிவதென்ருல் தற்கொலைபுரிந்து கொள்வதல்ல" என்ருள்.

இதற்குள் இருவரும் கன்னியாமடத்தை நெருங்கி விட்டார்கள். சுந்தராபாய் "நான் போகிற இடம் இது தான்" என்று கூறிக்கொண்டே கதவைத் தட்டினுள்.

மீனாட்சி "ஆ! தெரிந்துகொண்டேன். அப்படியாயின் உடைகளில் இருந்த இரத்தக்கறை அத்தகையபாதகச் செயலைக் குறிக்கிறதா?" என்றாள்.

சுந்தராபாய் "ஒன்றும் கேட்காதே; இதற்குள் நுழைந்து விட்டால் உயிரோடு கல்லறையில் வைக்கப்பட்ட மாதிரியே" என்றாள். அதற்குள் கதவு திறக்கப்பட்டது. சகோதரிகள் இருவரும் இரண்டொரு வார்த்தைகள் பேசியதும் பிரிந்து விட்டார்கள். மீனாட்சி கண்ணீர் விட்டுக்கொண்டே நகரத்தை நோக்கித் திரும்பினாள். சுந்தராபாய், துக்கா பாய் என்ற பெயரோடு மடத்தில் சேர்ந்து கொண்டாள்.

இப்போது சிறைச்சாலையில் நடந்த சம்பவத்தைக் கவனிப்போம். தேவராஜின் தாயார் அவனைக்காணச் சிறைச் சாலைக்குச்சென்றபின் அவனை விட்டுப்பிரியவில்லை. அந்தோ! அவளுக்கிருப்பது ஒரே புத்திரன்; எத்தகைய அயோக்கியனாயினும் தாய்க்கு அவனைக் குரூரமான மரணத்திற் கிரையாக்க மனம் வருமோ? அதிலும் சகல நற்குணங்களும் நன்னடக்கைகளும் பொருந்தி எவராலும் நன்கு மதிக்கப்படும் புதல்வனை யவ்வாறிழப்பதெனின் தாயார் மனம் எத்தகைய வேதனையடையும்? தேவராஜு தன்னால் கூடிய வரையில் தைரியத்தோடிருந்தான். இரவு கழிந்து கொண்டேபோகிறது. மணி கிட்டத்தட்டப் பனிரண்டாகப் போகிறது. காலை ஆறுமணிக்கு தேவராஜு சவமாய் விடுவான்.

தாயாரின் மனம் பெரிய நரகவேதனை யடையத் தொடங்கியது. அவள் ஏக்கங்கொண்டவள் போல் தன் புதல்வனையே நோக்கிக்கொண்டிருந்தாள். திடீலென்று அலறி "அய்யோ மகனே!" என்று அவனைக் கட்டிக்கொள்வாள்; வரவரப் பித்தம் பிடித்தவள்போல் பிரலாபிக்கத் தொடங்கினாள். தேவராஜு எங்கே தன் தாயின் புத்தி சபலித்து விடுமோ" என்று பீதியடைந்தான். "அய்யோ!

நேரமாய் விட்டதே. மீனாட்சி வரக்காணேமே. நம்பிக்கையில்லையோ? உன்னைக் காட்டிக்கொடுத்த அச்சண்டாளி தன்னாலாகாத காரியத்தைக் கூறி விட்டாளோ?" என்றாள்.

தேவராஜன் "அம்மா! அவளையொன்றும் கூறாதே. சுந்தராபாய் இராஜகுமாரி மனப்பூர்வமாகவே தான் செய்த காரியத்திற்காகத் துயரப்படுகிறாள். அவள் என்னை யேமாற்ற வேண்டுமென்று நம்பிக்கை யிருப்பதாய் என்னிடம் கூறிச் சென்றவளல்ல. ஒரு சமயம் அவள் முயற்சி ஜெயமடைந்திருக்கலாம். எதற்கும் நாம் நம்பிக்கை கொஞ்சமும் வைக்காமலிருப்பதே நலம்; நம்பிக்கை வைத்து அது நிறைவேறாவிடின் நாம் அதிகவேதனை யடையவேண்டியதாயிருக்கும்" என்றான்.

தாயார் "ஓ! அவள் மனப்பூர்வமாக அப்படிக் கூறியிருந்தால் நான் அவளை மனதார மன்னித்து விடுகிறேன். நான் சென்று அவள் பாதங்களில் வீழ்ந்து வேண்டிக் கொள்கிறேன்" என்றாள்.

தேவராஜன் "அய்யோ! நீ போக வேண்டாம். நீ இங்கிருந்தால் என் மனம் தைரியமாகவிருக்கிறது. நீ போய் விட்டால் என்மனம் வேதனையடையும். மேலும் மீனாட்சிச் சீமாட்டி இவ்விஷயத்தில் தன்னாலான முயற்சியனைத்தும் எடுத்துக்கொள்வாள். அவள் தன் சகோதரிக்குக் கூற வேண்டியதைக் கூறுவாள். அதற்குமேல் நீ கூற ஒன்றுமிராது. ஆகையால் இங்கேயே இரு" என்றான்.

நேரம் ஆக நேரம் ஆகத் தாயின் மனம்மிக்க வேதனையடைந்தது. மணி பனிரண்டடித்தது. அப்போது தாயார் அடிக்கடி கதறி யழத்தொடங்கினாள். தன் புதல்வனைக் கெட்டியாய்க் கட்டிக்கொண்டு அய்யோ என் மகனை யொருவருங்கொல்லும்படி விடேன் என்றாள். தேவராஜன் "அம்மா

நீ சற்றுப் பொறுமையாக இரு; உன்னை மிகவும் வேண்டிக் கொள்கிறேன்" என்றான். அச்சமயம் அவன் இருக்கும் அறையின் கதவிலுள்ள பூட்டை யாரோ திறப்பதுபோல் சத்தம் கேட்டது.

தாயார் "அய்யோ! உன்னையழைத்துக்கொண்டுபோக வந்து விட்டார்கள். நான் விடமாட்டேன்....." என்றதே,

தேவராஜு "அம்மா! அழைத்துக் கொண்டுபோக வல்ல. பொழுது விடிய இன்னம் இரண்டு மூன்றுமணி நேரம் இருக்கும்" என்றான்.

அதே விநாடி கதவு துரிதமாய்த் திறக்கப்பட்டது. ஒரு மாது பாய்ந்து வந்து "தப்பினாய்" என்றாள். இருவரும் தட்டென்றெழுந்து பார்த்ததும் "ஆ! மீனாட்சிச் சீமாட்டி! மெய்யா? மெய்யா?" என்றார்கள்.

மீனாட்சிச்சீமாட்டி "ஆம். உண்மையாகவே உனது உயிர் பட்டம் ஆஸ்தி யாவும் காப்பாற்றப்பட்டன. சீக்கிரத்தில் நியாயாதிபதியாகிய ஜெனராலே வந்து கூறி நம்மை வெளியிலனுப்புவார்" என்றாள். தாயார்க்குண்டான சந்தோஷத்திற்களவேயில்லை. அதற்குள் சிறைச்சாலைக்காவலன் வந்து தேவராஜின் காத்தைப்பற்றிக்கொண்டு "தாங்கள் காப்பாற்றப்பட்டதற்காக நாங்கள் மனப்பூர்வமாய்ச் சந்தோஷமடைகிறோம். பிரபுவே! தாங்கள் குரூரமான தண்டனை யடைந்தது எங்களுக்கெல்லாம் மனவருத்தமே" என்றான்.

மறு நிமிடம் ஜெனராலும் அவர் புத்திரிகளாகிய இலட்சுமி மாரகதம் இருவரும் சிறைச்சாலைக்கு வந்தார்கள். மீனாட்சிச் சீமாட்டி, தேவராஜு கொடுத்ததாக அக்கடிதக்கட்டை ஜெனரலிடம் கொடுத்து அதில் இருக்கிற பத்திரங்கள் இன்னவையென்று கூறியதே துரைத்தன விளம்பரப்படி தேவராஜு விடுதலை செய்யப்பட வேண்டியவரேயென்று தெரி

ந்து விட்டபடியால் அச்சந்தோஷ சங்கதியைத் தாங்கள் நேரில் போய் தேவராஜின் தாயாருக்குக்கூறவேண்டு மென்று அம்மங்கையர் இருவரும் தங்கள் தந்தையோடு கூடப் புறப்பட்டு வந்தார்கள்.

அவர்களைக்கண்டதே தேவராஜின் தாயாருக்கு யாவும் உண்மையே என்று நம்பிக்கையாய்த்தெரிந்து விட்டபடியால் அப்போதுண்டான சந்தோஷத்தால் மூர்ச்சையடைந்து அக்கன்னிகைகளின்மேல் சாய்ந்து விட்டாள். ஜெனரல் தேவராஜின் காத்தைப்பற்றிக்கொண்டு "பிரபுவே! நான் சந்தோஷத்தோடு தங்களை விடுதலை செய்கிறேன். நான் இராஜாங்கக்கட்டளைப்படி என் கடமையைச் செய்ததற்காகத் தாங்கள் என்மேல் மனவருத்தம் வைக்கமாட்டீர்களென்று நம்புகிறேன்" என்றார்.

தேவராஜு சாதாரணமாக அவர்மேல் மனஸ்தாபம் வைத்துக் கொள்ளுகிறவனல்ல. ஏனெனில் இராஜாங்க முறைமைக்கு அடங்கி நடக்கவேண்டிய கடமைப்படி நடந்தார் என்பதே அவனுடைய அபிப்பிராயம். அதோடு அவருடைய புத்திரிகள் இருவரும் தன் தாயாரிடம் காட்டிய அன்பிற்காக அவருக்கு எள்ளளவு மனஸ்தாபமேனும் உண்டாக்கத்தக்க விதமாக நடந்துகொள்ள லாகாதென்பது அவனுடைய எண்ணம். அவன் ஜெனரலை நோக்கி "நான் சற்று நேரம் மீனாட்சிச் சீமாட்டியிடம் தனியாய்ப் பேசும்படி அனுமதியளிக்க வேண்டும்" என்றான்.

ஜெனரல் "பிரபுவே! தாங்கள் இப்போது பூரண சுயாதீன மடைந்திருக்கிறீர்கள். தங்கள் பிரியப்படியே நடக்க ஒரு தடையுமில்லை. "யாரொருவர் சுந்தரசிங் அரசனுடைய கடிதங்களைக் கொண்டுவந்து கொடுக்கிறார்களோ, அவர்கள் எத்தகைய இராஜத்துரோகமான குற்றத்தைச் செய்திருந்தாலும் மன்னிக்கப்படுவார்கள். அதுமட்டுமல்ல; அவர்கள்

அத்தகைய குற்றம் ஏதேனும் செய்து பிராணனை யிழக்கும்படி தண்டனை யடைந்திருந்தால் அத்தண்டனை நீக்கப்பட்டு அவர்கள் பிராணன் காப்பாற்றப் படுவதோடு அவர்கள் பட்டம் ஆஸ்தி முதலியவைகளை யதனுல் இழந்துவிட்டிருந்தால் அவையாவும் பூரணமாய் அவர்களுக்கு அளித்து விடப்படும்" என்பதே அரசரின் விளம்பரம். ஆகையால் தாங்கள் அக்கலகக்காரர் கூட்டத்தில் சேர்ந்திருந்ததால் உண்டான தீங்குகளனைத்தும் அடியோடொழிந்தன. இனித் தங்கள் பிரியம்போல் நடக்கலாம்" என்ருர்.

தேவராஜு:—"நான் சீக்கிரத்தில், 'அந்தக் கலகக்காரர் கூட்டத்தில் நான் சேர்ந்திருந்தது என் பிரியப்படியல்ல; பலவந்தப் படுத்தப்பட்டதாலேயே அப்படி நான் அவர்கள்கூட்டத்தில் இருக்கநேர்ந்தது' என்று துரைத்தனத்தாருக்கு நிரூபிக்க வேண்டியது எனது கடமை. நான் உடனே அதைச் செய்வேன்" என்ருன்.

அருகிலிருந்த மீனுட்சிச்சீமாட்டி "அதற்கு வேண்டிய அத்தாட்சிகளை நானும் என் தமக்கையும் மிக்க சந்தோஷத்தோடு சுலபமாய் அளிப்போம்" என்று உறுதியாய்க் கூறினுள்.

அதன்பிறகு ஜெனரல் அறையைவிட்டு அப்புறம் சென்ருர். தேவராஜின் தாயாரை ஜெனரிலின் புத்திரிகள் தங்கள் மாளிகைக்கு அழைத்துச் சென்ருர்கள். யாவரும் சென்றபின் தேவராஜு மீனுட்சியை நோக்கி "அந்தோ! நீ செய்த இத்தகைய அரிய உதவிக்கு நான் என்ன கைம்மாறுதான் செய்ய வல்லேன்" என்ருன்.

மீனுட்சி "தாங்கள் தவருகக் கருதும்படி நான் இடந்தலாகாது. மேலும் எனக்கு உண்மையில் உரித்தல்லாத புகழ்ச்சியையும் பெருமையையும் ஒருவர் தவருன அபிப்பிராயத்தால் அளிப்பதாயின் நான் அதை யேற்றுக்கொள்ள

மாட்டேன். தமக்கு உரித்தல்லாத புகழையும் பெருமையையும் தம்மதாக ஏற்றுக்கொண்டு மகிழ்வோர் மிக்க இழிகுணமுடையவர்களாவர். அவர்கள் நியாயப்படித் தமக்குரித்தாகிய புகழையும் கௌரவத்தையும் இழந்து விடுவார்கள். தங்களைக் காப்பாற்ற இப் பெருமுயற்சி யெடுத்துக்துக் கொண்ட கீர்த்தி முழுமையும் என் சகோதரியுடையதே. இது சத்தியம்" என்றாள்.

தேவ:—"ஆ! அப்படியாயின் நான் சுந்தராபாய் இராஜகுமாரியைப்பற்றி நினைக்கும்போதெல்லாம் மிக்க நன்றியோடு வாழ்த்துவேன்" என்றான்.

சீமாட்டி:—இந்த வாக்குத் தத்தத்திற்காகத் தங்களுக்கு வந்தனமளிக்கிறேன்.

தேவ:—ஆ! நான் நேரில் உன் சகோதரியைக்கண்டு என் நன்றியறிதலை யறிவிக்கவேண்டும். வா! உடனே அவள் இருப்பிடத்திற்குச் செல்வோம்.

சீமா:—"அந்தோ! அது நடவாத விஷயம். அவள் இப்போது தங்களைக்கண்டு சம்பாஷிக்கும் படியான நிலைமையிலில்லை. தாங்கள் உடனே தங்களின் தாயிடம் சென்று இப்போது கடவுள் அளித்த சந்தோஷத்தை யனுபவியுங்கள். நான் உடனே சுந்தராபாயிடம் செல்லவேண்டும்.

தேவ:—ஆ! சுந்தராபாய் இத்தகைய முக்கியமான பத்திரங்களை யெப்படிக் கொண்டுவந்து என் பிராணனைக் காப்பாற்ற முடிந்தது? அதைமட்டும் கூறலாகாதா?

மீனு:—தயவு செய்து அதைப்பற்றி யிப்போது என்னை விவரம் கேட்கவேண்டாம். கடவுள் தயவால் என் சகோதரி மூலமாய் இக்கடிதங்கள் கிடைத்தன. இனி இவற்றால் தங்களுக்குக் கிடைத்த சந்தோஷத்தை யனுபவியுங்கள். நான் போய் என் சகோதரியிடம் தாங்கள்

விடுதலை யடைந்த சங்கதியைக் கூறவேண்டும். மற்றவை பிறகு சமயம் வாய்க்கும் போது பேசிக்கொள்ளலாம். இனி நான் விடை பெற்றுக்கொண்டு செல்கிறேன்" என்று கூறிவிட்டுச் சிறைச்சாலையை விட்டுச் சென்றாள்.

அடுத்த நிமிடம் தேவராஜு ஜெனரலால் எதிரிலுள்ள அவர் மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டான்.

---

## 188-வது அத்தியாயம்.

ஜெனரலுக்கும் புத்திரிகளுக்கும் உள்ள நடத்தையில் வித்தியாசம்—மீனாட்சிச் சீமாட்டியும் தேவராஜுவும்—மீனாட்சிச் சீமாட்டி தேவராஜிடம் விடைபெற்றுத் திரிபுரம் செல்லுதல்—தேவராஜுப்பிரபு, அவன் தாயார், பலராமன் மூவரும் கமலாபுரம் புறப்படுதல்.

186503

ஜெனரலின் புத்திரிகள் தேவராஜின் தாயாரைத் தங்கள் மாளிகைக்குக் கொண்டு போனவுடனே வேண்டிய உபசாரங்களனைத்தும் செய்து அம்மாதின் மூர்ச்சையைத் தெளிவித்து அவளுக்குச் சிற்றுண்டி யளித்து அவள் மனம் மிக்க மகிழ்வடையும்படி செய்தார்கள்.

தேவராஜு அங்கு சென்றதும் ஜெனரல் அவனுக்கு மிக்க அன்புமரியாதையும் காட்டி அவனையும் அவன் தாயாரையும் இரண்டொரு நாட்களேனும் தங்கள் விருந்தாளிகளாக இருந்து செல்லும்படி வேண்டினார். அவருடைய புத்திரிகளும் அன்போடு அவ்வாறே வேண்டிக் கொண்டார்கள்.

இங்ஙனம் தேவராஜை விட்டுப் பிரிந்தபோதுதான் மீனாட்சி, சுந்தராபாயிடம் சென்று நாம் முன்பு கூறியபடி தன் கடமையைச் செய்து விட்டதாகக் கூறினால் அப்போது

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்கள் இயற்றியது.

# கனகபூஷணம்.

(இது ஓர் கற்புடைய உத்தமியின் அதிசயமான கதை.)

இதில் கற்பிலக்கணம் விவரமாய் உலக அனுபவத்தோடு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. இக்கதாநாயகி தனக்கு நேரிடும் மிக்க பயங்கரமான அனேக இக்கட்டுகளிலிருந்து தன் கற்புக்குப் பழுதுவராமல் தப்பித்துக்கொள்வது மிக்க சோகத்தையும் ஆச்சரியத்தையும் தரும். அதோடு இதில் எவ்விதமான நடவடிக்கைகளும், அவைகளாலுண்டாகும் நன்மை தீமைகளும் தெளிவாய்க் கூறப்பட்டிருப்பதால், இது வாசிப்பவர்களுக்குச் சகலவித நற்குணங்களையும் போதிக்கக்கூடியதென்பது உண்மை. ஆண்பாலர், பெண்பாலரிருவர்க்கும் வேண்டிய சகல புத்திமதிகளும் இதில் அடங்கியிருக்கின்றன. இது முழுதும் உலக வழக்கத்தையும் அனுபவமான ஆசாரத்தையும் ஒட்டி எழுதப்பட்டிருக்கிறது.

முதல்பாகம் ரூ. 1—12—0 2-ம் பாகம் ரூ. 1—12—0

---

# இரத்தினபுரி இரகசியம்.

## ஓர் அற்புதமான தமிழ் நாவல்.

இதில் மிக்க ஆச்சரியமுள்ளவையும், நெஞ்சு திடுக்கிடக் கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக் கூடியவையுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. இங்ஙனம் பலவித நடவடிக்கைகளுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தகக திருட்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணர வேண்டிய இலெளகிக ஆசார விஷயங்களெல்லாம் ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றன. இதன் இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூறவேண்டுவதில்லை. இதில் எல்லா ரசங்களும் பூரணமா யிருக்கின்றனவென்று மட்டும் கூறுகிறோம்.

முதல் பாகம் ரூ. 1—12—0 2-ம்பாகம் ரூ. 2—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை மதராஸ்

# "ஆனந்தபோதினி"

## ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ளு ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண் கல்வியையும் நோக்கமாய்க் கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும்விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மை யொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப் படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 40 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0. மாதிரிக்காப்பி இனாம்.

### ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி இரகசியம் | ரூ. | அ. | தினகரசுந்தரி ரூபா | 1 | 0 |
| 2-பாகமும் ... | 4 | 0 | தபால்கொள்ளைக்காரர் | 0 | 14 |
| பவளத்தீவு 2-பாகமும் ... | 3 | 0 | பத்மாஸனி ... | 0 | 14 |
| கற்கோட்டை ... | 2 | 0 | வீரநாதன் ... | 0 | 12 |
| மின்சார மாயவன் ... | 1 | 8 | குணசுந்தரன் ... | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 | மஞ்சள் அறையின் மர்மம் | 1 | 8 |
| கனகபூஷணம் 2-பாகமும் ... | 3 | 8 | கமலசேகரன் ... | 1 | 12 |
| சுவர்ணாம்பாள் ... | 0 | 12 | பூங்கோதை ... | 0 | 10 |
| ஆனந்தவிங .. | 2 | 0 | இந்திராபாய் ... | 2 | 8 |
| மதனபூஷணம் ... | 1 | 0 | அமராவதி 2 பாகமும் | 4 | 0 |
| ஞானசெல்வாம்பாள் | | | மதனாம்பாள் 2 பாகமும் | 3 | 0 |
| 4 பாகமும் ... | 8 | 0 | லோகநாயகி | 1 | 0 |

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Press Madras.